بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 9

இதழ் 29 & 30

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1445 - முஹர்ரம் 11 -18 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403

வஃபா 18 - 25 ★ 18 - 25 ஜூலை 2024


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰہَ لَا یُغَیِّرُ
مَا بِقَوۡمٍ حَتّٰی یُغَیِّرُوۡا مَا بِاَنۡفُسِہِمۡ ؕ
وَ اِذَاۤ اَرَادَ اللّٰہُ بِقَوۡمٍ سُوۡٓءًا فَلَا مَرَدَّ لَہٗ ۚ
وَ مَا لَہُمۡ مِّنۡ دُوۡنِہٖ مِنۡ وَّالٍ ﴿۱۲﴾

எந்த சமுதாயத்தினரும் தங்கள் அகநிலையை மாற்றிக் கொள்ளாத வரை அல்லாஹ் ஒருபோதும் அவர்களின் நிலையினை மாற்றுவதில்லை. அல்லாஹ் ஒரு சமுதாயத்தினருக்கு தண்டனையளிக்க முடிவு செய்துவிட்டால் அதனை அகற்றுபவர் எவருமில்லை. அவனையன்றி அவர்களுக்கு உதவி செய்பவரும் எவருமில்லை.

(அர் ரஅத்; 12)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

ஒட்டகத்தின் இயல்பில் இருக்கும் தலைமையைப் பின்பற்றும் விவகாரம் என்பது ஓர் ஒப்புக் கொள்ளப்பட்ட விவகாரம் ஆகும்

எல்லா ஒட்டகங்களும் தமக்கு முன்னால் இமாமாகவும், தலைவராகவும் செல்கின்ற அந்த (தலைமை) ஒட்டகத்திற்குப் பின்னால் ஒரு தனித்துவமான வடிவிலும், வேகத்திலும் செல்கின்றன. எனவே உலகப் பயணத்தை மேற்கொள்வதற்கு ஓர் இமாம் இல்லாத வரை மனிதன் வழிதவறிச் சென்று அழிந்து விடுகின்றான்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

கூறினார்கள்:

اَفَلَا یَنۡظُرُوۡنَ اِلَی الۡاِبِلِ کَیۡفَ خُلِقَتۡ

என்ற இந்த வசனம் திருக்குர்ஆனில் வந்துள்ளது. இந்த வசனம் நபித்துவம் மற்றும் இமாமத்தின் விவகாரத்தை தீர்ப்பதற்கு மிகவும் உதவிகரமான வசனம் ஆகும். அரபியில் ஒட்டகத்திற்கு சுமார் ஆயிரம் பெயர்கள் உள்ளன. மேலும், இந்தப் பெயர்களில் இபில் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் என்ன இரகசியம் உள்ளது? இலல் ஜமலி என்று ஏன் பயன்படுத்தப்படவில்லை?

அசல் விஷயம் இவ்வாறாக தெரிய வருகின்றது: அதாவது ஜமல் என்பது ஓர் ஒட்டகத்திற்கு கூறப்படுகின்றது. மேலும் இப்ல் என்பது இஸ்மே ஜம்ஆ ஆகும். இங்கு அல்லாஹ்விற்கு நாகரீக மற்றும் சமுதாய நிலையை வெளிப்படுத்துவது நோக்கமாக இருந்தது. மேலும் ஓர் ஒட்டகத்திற்காக கூறப்படும் ஜமலி என்ற சொல்லில் இந்த நோக்கம் நிறைவேற முடியாது. எனவே இப்ல் என்ற சொல்லை இறைவன் விரும்பியுள்ளான். ஒட்டகங்களில் ஒன்றை மற்றொன்று பின்தொடர்வதற்கும், கட்டுப்படுவதற்கும் ஆற்றலை வைத்துள்ளான். பாருங்கள்! ஒட்டகங்களின் ஒரு நெடிய வரிசை இருக்கின்றது. மேலும், எல்லா ஒட்டகங்களும் மற்ற எல்லா ஒட்டகங்ளுக்கும் முன்னால் இமாமாகவும், தலைவராகவும் செல்கின்ற அந்த ஒட்டகத்திற்குப் பின்னால் ஒரு தனித்துவமான வடிவிலும், வேகத்திலும் செல்கின்றன. அந்த தலைமை ஒட்டகம் பெரும் அனுபவம் வாய்ந்ததாகவும், வழிப்பாதையை நன்கறிந்ததாகவும் இருக்கின்றது. பின்னர் அனைத்து ஒட்டகங்களும் ஒன்று மற்றொன்றை சமமான வேகத்தில் பின்தொடர்ந்து செல்கின்றன. மேலும், அவற்றில் எந்தவொன்றின் எண்ணத்திலும் மற்ற

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்....

ஹஜ் செய்யும்போது இறையச்சம் மற்றும் அல்லாஹ்வின் மீதான பயத்தை கருத்தில் கொள்ளாத வரை ஹஜ் செய்வதால் எந்த பயனும் கிடைக்க முடியாது. மனிதன் தனது எல்லா பணிகளிலும் இறைவனின் திருப்தியை கருத்தில் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அதே நன்மை அவனுக்கு அழிவு மற்றும் தண்டனைக்கான காரணியாக ஆகிவிடும்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பல மக்கள் ஹஜ் செய்வதற்கு ஆசைப்படுகின்றனர். ஆனால், குறித்த நேரத்தில் அதனை முழுமை செய்வதில்லை. மேலும், இவ்வாறு அவர்கள் ஒரு மாபெரும் நன்மையிலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆகிவிடுகின்றனர். எனவே எந்த மக்களுக்கு அல்லாஹ் ஆற்றல் வழங்கியுள்ளானோ அவர்கள் பைத்துல்லாஹ்விற்கு ஹஜ் செய்து காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆனால், அவ்வாறு ஹஜ் செய்வதும் கூட இறையச்சம் மற்றும் அல்லாஹ்வின் மீதான பயத்தை கருத்தில் கொள்ளாத வரை எந்தப் பயனும் தரமுடியாது. நான் ஹஜ் செய்வதற்காக சென்றபோது, சூரத் பகுதியைச் சேர்ந்த ஒரு வியாபாரியான இளைஞரை கண்டேன். அவர் மினாவை நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் இறை தியானத்தை மேற்கொள்வதற்கு பகரமாக உருது மொழியின் மிகவும் மோசமான காதல் கவிதைகளை படித்துக் கொண்டிருந்தார். இது தற்செயலாக நிகழ்ந்த விஷயமாகும். அதாவது நான் திரும்பி வந்தபோது, நான் எந்த விமானத்தில் பயணம் மேற்கொண்டிருந்தேனோ அதே விமானத்தில் அவரும் திரும்பிக் கொண்டிருந்தார். ஒருநாள் நான் சந்தர்ப்பம் பார்த்து, நீங்கள் ஹஜ் செய்வதற்கு ஏன் வந்தீர்கள்? என்று உங்களால் கூறமுடியுமா? என்று அவரிடம் கேட்டேன். மேலும், மினாவிற்கு சென்று கொண்டிருக்கும்போதும் கூட நீங்கள் இறை தியானம் செய்யாமல் இருந்ததை நான் கண்டேன்; என்று நான் கூறினேன். அதற்கு

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்....

## நபிமொழி

**ஜமாஅத்தின் செல்வங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் ஆகுமற்ற செலவுகளில் இருந்து விலகியிருப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவுரை**

(2597) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த இப்னு உத்பியா என்றழைக்கப்பட்ட ஒருவரை ஸகாத் வசூல் செய்யும் பணியில் நியமித்தார்கள். அவர் (ஸகாத் வசூல் செய்து கொண்டு)வந்தபோது, இது தங்களுடையது; மேலும் இது எனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது என்று கூறினார்.

அப்போது அன்னார் (ஸல்) கூறினார்கள்: அப்படியென்றால் அவர் ஏன் தனது தந்தையின் வீட்டிலோ அல்லது தனது தாயின் வீட்டிலோ அமர்ந்து கொண்டு. தமக்கு அன்பளிப்பு கிடைக்கிறதா? இல்லையா? என்று இவர் பார்க்கட்டுமே! எந்த இறைவனின் கரத்தில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! உங்களில் எவர் (இந்த ஸகாத்தின் செல்வத்திலிருந்து முறைகேடாக) சிறிது எடுப்பாரோ அவர் நிச்சயமாக கியாமத் நாளன்று தனது பிடரியில் அந்த செல்வத்தை சுமந்து கொண்டு வருவார்; அது ஒட்டகமாக இருந்திருந்தால் பின்னர் அது கனைத்துக் கொண்டிருக்கும்; அது ஆடாக இருந்திருந்தால் பின்னர் அது கத்திக் கொண்டிருக்கும். பின்னர் அன்னார் (ஸல்) தமது கரத்தை உயர்த்தினார்கள். (அன்னார் (ஸல்) கூறினார்கள்:) எனது அல்லாஹ்வே! நான் உனது கட்டளையை எட்ட வைத்து விட்டேன் அல்லவா? என்று இந்த வார்த்தைகளை அன்னார் (ஸல்) மூன்று முறை கூறினார்கள்.

(புகாரி, கிதாபுல் ஹிபா)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பனூ நளீர் போருக்கான காரணகள் & சூழல்கள் மற்றும் சம்பவங்கள்**
**பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக துஆ செய்வதற்கான அறிவுரை**

பனூ நளீர் போருக்கான காரணிகளை எடுத்துரைத்தவாறு ஹதீஸ் வல்லுநர்களும் வரலாற்றாசிரியர்களும் பல்வேறு காரணிகளை எடுத்துரைத்துள்ளனர். மேலும் இந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக இந்தப் போர் நிகழ்ந்த காலம் தொடர்பாகவும் கருத்துவேறுபாடு ஏற்பட்டுள்ளது. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள்)

அம்மக்களின் தலைவரான ஹூயய் பின் அக்தப் என்பவர், யூத கூட்டமே முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் சில தோழர்களுடன் உங்களிடத்தில் வந்துள்ளார். அவர்களின் எண்ணிக்கை 10-ஐ விடவும் குறைவாக உள்ளது. இந்த வீட்டின் மேலே இருந்து பெரும் பாறையை எறிந்து முஹம்மத் (ஸல்) அவர்களை கொன்று விடுங்கள். உங்களுக்கு இதை விட சிறந்த வாய்ப்பு மீண்டும் கிடைக்காது. அவர்களை கொன்று விட்டால் அவர்களின் தோழர்கள் சிதறிப் போய்விடுவார்கள். மக்காவிலிருந்து வந்த அவர்களின் தோழர்கள் திரும்ப மக்காவுக்கு சென்று விடுவார்கள். இங்கு அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தினர் எஞ்சி விடுவார்கள். அவர்கள் உங்களுடைய நட்பு கோத்திரங்கள் ஆவார்கள். ஆகவே நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதை இப்பொழுதே செய்து விடுங்கள் என்று கூறினார்.

அல்லாஹ் விரைவில் அஹ்மதிகளுக்கு இந்த அநீதியாளர்களிடமிருந்து இரட்சிப்பை வழங்குவானாக மேலும் அங்கும் நிலைமைகளை சிறப்பாக்குவானாக. சிறு சிறு விஷயங்களிலும் வழக்கு தொடுப்பதற்கும் தொல்லைகள் கொடுப்பதற்கும் முயற்சி செய்யப்படுகின்றது. மதிப்பிற்குரிய குலாம் சர்வர் ஸாஹிப் ஷஹீது மற்றும் மதிப்பிற்குரிய பஷீர் அஹ்மத் ஸாஹிப் ஷஹீது ஆகியோரின் நற்குறிப்புகள் மற்றும் அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகை

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 ஜுன் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **14 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

நான் இன்று பனூ நளீர் போரைப் பற்றி கொஞ்சம் குறிப்பிடுவேன். பனூ நளீர் கோத்திரத்தின் அறிமுகம் என்னவென்றால், பனூ நளீர் என்பது மதீனாவின் ஓர் யூத குடும்பமாக இருந்தது. பனூ நளீர் கைபர் உடைய யூத கோத்திரமாகும்; அவர்கள் வசிக்கக் கூடிய இடத்தை ஸஹ்ரா என்று அழைப்பார்கள் என சில வரலாற்றாசிரியர்கள் எழுதியிருக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா சென்றபோது அந்நேரத்தில் பனூ நளீருடைய தலைவராக ஹூயய் பின் அக்தப் என்பவர் இருந்தார். அவருடைய மூதாதையர்களில் ஆறாவது வம்சத்தில் நளீர் பின் நஹாம் என்ற ஒருவருடைய பெயர் வருகிறது. அவருடைய பெயரால் இந்த கோத்திரம் பனூ நளீர் என்று அழைக்கப்படுகின்றது. உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் பனூ நளீர் உடைய இத்தலைவரான ஹூயய் பின் அக்தப் உடைய மகளாக இருந்தார்கள். வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளதாவது: ஹூயய் பின் அக்தப் உடைய முந்தைய தலைமுறை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சகோதரரான ஹஸ்ரத் ஹாரூன் (அலை) அவர்களை சென்றடைகின்றது. ஹூயய் பின் அக்தப் என்ற இந்த நபருடைய மூதாதையர்களில் பல பேர் நபிமார்களாக ஆகும் நற்பேறு பெற்றிருந்தார்கள். அதனால் இவருக்கு ஆணவம் இருந்தது. அந்த ஆணவத்தின் காரணமாக அல்லாஹ் எங்கள் மீது இவ்வுலகில் பேரருள் செய்துள்ளான்; மறுமையிலும் அவன் எங்கள் மீது பரிவும், பேரருளும் செய்வான்; பாவங்களின் காரணமாக அவன் எங்களுக்கு சில நாட்கள் (மட்டுமே) தண்டனை அளிப்பான்; இறுதியில் சொர்க்கமே எங்களுடைய தங்குமிடமாக இருக்கும் என்று அவர் கூறிவந்தார். இந்த குலப் பெருமை மற்றும் ஆணவத்தின் காரணமாக ஹூயய், பெருமானார் (ஸல்) அவர்களுடைய போதனையை விட்டு முகம் திருப்பிக் கொண்டார். பனூ நளீர் கோத்திரம் இருந்த இடத்தைப் பற்றி வரும்போது, அது குபா பள்ளிவாசலில் இருந்து அரை மைல் தொலைவில் இருந்தது; வடகிழக்கு பகுதியில் மதீனாவின் மத்தியப் பகுதியில் அவர்களின் குடியிருப்பு முதலில் வரும்; அதற்கு சற்று தெற்குப் பகுதியில் குபா பள்ளிவாசல் அமைந்திருந்தது.

பனூ நளீர் போர் ஹிஜ்ரி 4ம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதத்தில் நிகழ்ந்தது. உஹது போருக்கு முன்பு நிகழ்ந்ததாகவும் ஒரு கூற்று உள்ளது. இமாம் புகாரி அவர்களின் கூற்றும் இதுவே ஆகும். ஆயினும், இமாம் புகாரி அவர்கள் இந்த இடத்தில் இன்னொன்றையும் எழுதியிருக்கின்றார்கள்: அது என்னவென்றால், இப்னு இஸ்ஹாக்கைப் பொருத்தவரை இந்தப் போர் உஹது மற்றும் பிஃரே மவூனாவுக்குப் பிறகு நிகழ்ந்தது என்ற விஷயத்தையும் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். உஹூது போருக்கு பிறகுதான் பனூ நளீர் போர் நிகழ்ந்தது என்று அல்லாமா இப்னு கஸீரும். அநேக வரலாற்றாசிரியர்களும், வாழ்க்கை வரலாற்றாசிரியர்களும் எழுதியிருக்கின்றார்கள்.

பனூ நளீர் போருக்கான காரணத்தை குறித்து கூறப்பட்டுள்ளதாவது: மக்கத்து குறைஷியர்கள் பத்ர் போருக்கு முன்பு அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் மற்றும் அவ்ஸ், கஸ்ரஜ் (ஆகிய கோத்திரங்களி)ன் இதர சிலை வணங்கிகளுக்கு கடிதம் எழுதினார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்தார்கள். அந்தக் கடிதத்தில், நீங்கள் எங்களது தோழருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளீர்கள்; மதீனாவில் உங்களுடைய எண்ணிக்கை அனைவரையும் விட அதிகமாக உள்ளது;நாங்கள் சத்தியம் செய்து கூறுவதென்னவென்றால், நீங்கள் அவர்களுடன் போரிடுங்கள் அல்லது அவர்களை உங்களது நகரத்திலிருந்து வெளியேற்றி விடுங்கள் அல்லது நாங்கள் அரேபியர்களை ஒன்று திரட்டி உங்கள் மீது தாக்குதல் தொடுப்போம்; உங்களுடைய போர் வீரர்களுடன் போர் செய்வோம்; உங்களுடைய பெண்களையும், குழந்தைகளையும் வெட்டி வீழ்த்துவோம் என்று எழுதியிருந்தார்கள். மக்கத்து காஃபிர்கள் மதீனாவின் தலைவர்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதியிருந்தார்கள். உபை பின் ஸூலூல் மற்றும் இதர சிலை வணங்கிகளுக்கு இந்தக் கடிதம் கிடைக்கப் பெற்றபோது அவர்கள் ஒருவர் மற்றவருக்கு செய்தி அனுப்பிக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) மற்றும் அன்னாருடைய ஸஹாபிகளுக்கு எதிராக போர் செய்வது என்று உறுதியான எண்ணம் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இது பற்றிய தகவல் கிடைத்தபோது அன்னார் (ஸல்) ஸஹாபிகளின் ஒரு குழுவை அழைத்துக் கொண்டு அவர்களை சந்திக்க சென்றார்கள். அதாவது மதீனாவினுடைய தலைவர்களை அன்னார் (ஸல்) சந்தித்தார்கள். மேலும் கூறினார்கள்:குறைஷியர்கள் உங்களுக்கு கடுமையான மிரட்டல் கொடுத்து கடிதம் எழுதி இருக்கின்றார்கள். அந்த கடிதம் உங்களை எந்தவோர் ஏமாற்றத்திலும் ஆழ்த்தி விட வேண்டாம். உங்களை நீங்களே எவ்வித ஏமாற்றத்திலும் மூழ்கடித்துக் கொள்ள வேண்டாம்; நீங்கள் உங்களுடைய

சகோதரர்களுக்கெதிராகவும், மகன்களுக்கெதிராகவும் போர் புரிந்து விட வேண்டாம் என்று கூறினார்கள். அவர்கள் அன்னாருடைய இவ்விஷயத்தைக் கேட்டபோது, அவர்களால் விஷயத்தை புரிந்து கொள்ள முடிந்தது. அவர்கள் தம் எண்ணத்தை தள்ளி வைத்து விலகிக் கொண்டனர். இவ்வாறு மக்கத்து குறைஷியர்களின் இந்த மிரட்டல் பயனற்றுப் போய்விட்டது.

குறைஷியர்கள் பத்ர் போருக்கு பிறகு யூதர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் , உங்களிடத்தில் ஆயுதங்கள் உள்ளன ; நீங்கள் கோட்டைகளின் எஜமானர்கள் ஆவீர்கள் ; ஒன்று நீங்கள் எங்களுடைய தோழருடன் போரிடுங்கள்; இல்லை என்றால் நாங்கள் உங்கள் மீது போர் தொடுப்போம்; உங்களுடைய ஆண்களை கொன்று விடுவோம்; உங்களுடைய பெண்களை எங்களுடைய அடிமைகளாக ஆக்கிக் கொள்வோம் என்று எழுதியிருந்தார்கள். இந்த கடிதம் யூதர்களுக்கு வந்தடைந்தபோது பெருமானார் (ஸல்) அவர்களுடன் மோசடி செய்யலாம் என்பதில் பனூ நளீர் பொருந்திக் கொண்டனர். ஏனெனில், யூத கோத்திரங்களோ ஏதாவது வாய்ப்பு கிடைத்தால் முஸ்லிம்களுடைய ஆட்சியையும், ஆற்றலையும் எவ்வளவு விரைவில் முடிவுக்கு கொண்டு வர முடியுமோ அவ்வளவு விரைவில் முடிவுக்கு கொண்டு வரலாம் என்று அவர்கள் ஏற்கனவே விரும்பிக் கொண்டிருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்களை இப்பொழுது கொலை செய்வதற்கு ஏதாவது திட்டம் வகுக்க வேண்டும் என்று அவர்கள் சிந்திக்க ஆரம்பித்தனர். நவூதுபில்லாஹ். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில், தாங்கள் முப்பது தோழர்களுடன் வருகை தாருங்கள்; எங்களுடைய முப்பது ஆலிம்களும் உங்களிடத்தில் வருவார்கள்; உங்களுக்கும் எங்களுக்கும் இடைப்பட்ட ஓர் இடத்தில் நாம் ஆஜராவோம் என்று அவர்கள் செய்தி அனுப்பினர். அதாவது எப்படிப்பட்ட ஓர் இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால் அது பொதுவானதாக இருக்க வேண்டும்; அவர்கள் தங்களுடைய பேச்சுக்களை கேட்பார்கள். அதாவது யூதர்களுடைய ஆலிம்கள், அவர்கள் தங்களை உண்மைப்படுத்தினார்கள் என்றால் அதாவது யூத ஆலிம்கள் தங்களின் மீது நம்பிக்கை கொண்டால் நாங்களும் தங்கள் மீது நம்பிக்கை கொள்வோம் என்று கூறினர். அடுத்த நாள் பெருமானார் (ஸல்) அவர்கள் 30 தோழர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். 30 யூத ஆலிம்களும் அன்னாரிடத்தில் வந்தார்கள். யூதர்கள் திறந்த வெளியில் புறப்பட்டபோது அவர்கள் ஒருவர் மற்றவரிடம், நீங்கள் அன்னார் மீது எப்படி தாக்குதல் தொடுப்பீர்கள்? அவர்களுடன் முப்பது தோழர்கள் வருகிறார்களே! அந்த 30 தோழர்கள் இருக்கும்போது நீங்கள் தாக்குதல் நடத்துவது கடினமாகும்: அவர்கள் எப்படிப்பட்ட தோழர்கள் என்றால் அன்னாருக்காக உயிரைக் கொடுக்கக் கூட அவர்கள் தயங்கமாட்டார்கள் என்று அவர்கள் பேசிக் கொண்டனர்.

எனவே யூதர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் நாம் 60 பேர் எப்படி கலந்துரையாடல் செய்ய முடியும்? ஆகவே தாங்கள் மூன்று தோழர்களை அழைத்து வாருங்கள் ; நாங்களும் எங்களுடைய மூன்று ஆலிம்களை அழைத்து வருகின்றோம்; அவர்கள் உங்களுடன் பேசுவார்கள் என்று செய்தி அனுப்பினர். எனவே மூன்று தோழர்களை அழைத்து வரக் கூடிய விஷயத்தை அன்னார் (ஸல்) ஒப்புக் கொண்டார்கள். மூன்று யூத ஆலிம்களும் புறப்பட்டார்கள். அந்த யூதர்களிடத்தில் கத்திகளும் இருந்தன. அவர்கள் அன்னார் (ஸல்) மீது தாக்குதல் நடத்த விரும்பினர். எவ்வாறிருப்பினும், அன்னார் (ஸல்) புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். அன்னார் (ஸல்) பனூ நளீரை நோக்கி சென்று கொண்டிருக்கும்போது பனூ நளீரைச் சேர்ந்த நலம் விரும்பியாக இருந்த ஒரு பெண் ஓர் அன்ஸாரி முஸ்லிமிடம், பனூ நளீர் பெருமானார் (ஸல்) அவர்களை ஏமாற்றுவதற்காக தீட்டிய திட்டம் குறித்தும் அவர்களின் நோக்கம் குறித்தும் அனைத்து விஷயங்களையும் கூறிவிட்டார். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களை சென்றடைவதற்கு முன்பே, அந்த நபர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி யூதர்களுடைய நோக்கத்தை குறித்து அன்னாருக்கு தகவல் கூறிவிட்டார். (ஆகவே) அன்னார் (ஸல்) மதீனாவுக்கு திரும்பி வந்து விட்டார்கள்.

இந்தப் போருக்கான இன்னொரு காரணத்தை எழுதியவாறு ஓர் எழுத்தாளர் இவ்வாறு கூறுகிறார்: பனூ நளீர் மறைமுகமாக குறைஷியர்களுக்கு செய்தி அனுப்பியது, அதில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் போர் செய்யும்படி அவர்களை தூண்டியது. எந்த அளவுக்கென்றால் முஸ்லிம்களுடைய சில பாதுகாப்பு பலவீனங்களை குறித்தும் அவர்களுக்கு கூறியிருந்தார்கள். இது எப்போது நடந்த விஷயம் என்றால், குறைஷியர்கள் முஸ்லிம்களுடன் போர் செய்வதற்காக உஹுதுக்கு அருகில் முகாமிட்டிருந்த போது நடந்ததாகும். இந்த காரணத்தை மூஸா பின் உக்பா அவர்கள் மட்டுமே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். சில அறிவிப்புகளின்படி உஹுது போருக்கு முன்பு யூதர்களும், மக்கத்து குறைஷியர்களை நன்கு தூண்டி விட்டார்கள் என்றும், அதன் விளைவாகவே உஹுது போர் மூண்டதும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தப் போருக்கான முக்கிய மற்றும் உடனடி காரணமாக பின்வரும் விஷயமும் கூறப்படுகிறது. அது என்னவென்றால் பிஃரே மவூனாவிலிருந்து திரும்பிய பிறகு ஹஸ்ரத் அம்ர் பின் உமையயா ஸம்ரீ (ரலி) அவர்கள் பனூ ஆமிருடைய இரு நபர்களை கொன்று விட்டார்கள். அவர்களுடன் முஸ்லிம்களுடைய ஒப்பந்தம் இருந்தது. இப்பொழுது அவர்களுடைய கொலைக்கான இழப்பீடு குறித்த விவகாரம் இருந்தது. இது தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ நளீரிடம் சென்றார்கள். ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில்,

أَنْ يُعَاوِنُوْهُ فِي الدِّيَاتِ

என்ற ஒரு நிபந்தனை இருந்தது. அதாவது அவர்கள் இழப்பீடு விவகாரத்தில் முஸ்லிம்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று கூறப்பட்டிருந்தது.




இந்த சம்பவத்தின் விபரம் பிஃரே மவூனா உடைய விபரத்தில் ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அது என்னவென்றால், ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ (ரலி) அவர்கள் பிஃரே மவூனாவில் இருந்து மதீனாவுக்கு திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். கன்னாத் என்ற இடத்தை அடைந்தபோது, கன்னாத் என்பது மதீனா மற்றும் உஹுதுக்கு இடையில் உள்ள மதீனாவின் மூன்று பிரபல்யமான பள்ளத்தாக்குகளில் ஒரு பள்ளத்தாக்காகும். இங்கு விவசாயமும் செய்யப்பட்டு வந்தது. ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ (ரலி) அவர்கள் பனூ ஆமிரைச் சேர்ந்த இரு நபர்களை சந்தித்தார்கள். அவர்களுடன் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் அவ்விருவரின் வம்சாவழியைக் குறித்து விசாரித்தார்கள். அவர்கள் தமது வம்சாவழியைக் குறித்து கூறினார்கள்: அந்த இரு நபர்களும் ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களுடன் இருந்தார்கள். அந்த இருவரும் தூங்கிய பிறகு ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ (ரலி) அவர்கள் அவ்விருவரையும் தாக்கி அவர்களைக் கொன்று விட்டார்கள். பிறகு விரைவாக பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி முழு சம்பவத்தையும் எடுத்துக் கூறினார்கள். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் செய்தது மிக மோசமான செயலாகும். அவர்களுடன் நமக்கு சமாதான ஒப்பந்தம் உள்ளது என்று கூறினார்கள். அந்த ஒப்பந்தம் குறித்து தனக்கு தெரியாது என்றும், நான் அவர்களை இணை வைப்பாளர்கள் என்று நம்பிக் கொண்டிருந்தேன்; அவர்களுடைய சமுதாயம் நம்முடன் மோசடி செய்திருந்தது என்றும், ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் அவ்விருவருடைய பொருட்களையும், துணிகளையும் கொண்டு வந்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள். அவர்களின் பொருட்களையும், உடைகளையும் அவர்களின் உறவினர்களுக்கு திரும்பக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள். அந்த பொருட்களை அவர்களின் கொலை இழப்பீட்டுடன் அனுப்பி வைக்கும்படி கூறினார்கள். அதற்கு பிறகு சனிக்கிழமை அன்று பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ நளீரை நோக்கி புறப்பட்டார்கள். மஸ்ஜித் குபாவில் தொழுகையை நிறைவேற்றினார்கள். முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார்களில் சிலரும் அன்னாருடன் இருந்தார்கள். அன்னார் பனூ நளீரை சென்றடைந்த போது, அன்னாருடன் பத்துக்கும் குறைவான ஸஹாபிகள் (மட்டுமே) இருந்தார்கள். அந்த மக்கள் தம் சபைகளில் அமர்ந்திருக்க கண்டபோது, அவர்களிடம் ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் கொலை செய்த இரு நபர்களுடைய இழப்பீட்டுத் தொகையை கொடுப்பதற்கு தமக்கு உதவி செய்யும்படி பேசுவதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களுடன் அமர்ந்து விட்டார்கள்.

இந்த போருக்கான காரணத்தைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் எழுதி இருக்கிறார்கள். அதன் மூலமாக மேற்கொண்டு விளக்கமும் கிடைக்கிறது. அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

இந்த போருக்கான காரணத்தை குறித்து ஹதீஸ் வல்லுனர்களும் வாழ்க்கை வரலாற்றாசிரியர்களும் பல்வேறு

காரணங்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்: இந்த கருத்து வேறுபாடுகளின் காரணமாக இந்த போருக்கான காலத்தைக் குறித்தும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு ஸஃது ஆகியோரை குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

நான் எவர்களை பின் தொடர்ந்து எழுதியுள்ளேனோ - இந்த இடத்தில் எவ்வித குறிப்பிட்ட ஆய்வையும் மேற்கொள்ளாமல் நான் பின் தொடர்ந்து எழுதியுள்ளேன். அவர்கள் கூறுவதென்னவென்றால் உஹூது போர் மற்றும் பிஃரே மவூனாவுக்கு பிறகு பனூ நளீர் போர் நடந்ததாக அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்கான காரணமாக அவர்கள் எழுதுவது என்னவென்றால், அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ (ரலி) அவர்களை காஃபிர்கள் பிஃரே மவூனா சம்பவத்தின்போது, கைது செய்து பின்னர் விட்டு விட்டார்கள். அவர்கள் மதீனாவை நோக்கி திரும்பி வந்து கொண்டிருக்கும்போது வழியில் பனூ ஆமிர் கோத்திரத்தைச் சார்ந்த இரு நபர்களை சந்திக்கிறார்கள். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்திருந்தார்கள். அம்ர் (ரலி) அவர்களுக்கு இந்த ஒப்பந்தம் குறித்து எதுவும் தெரியாது. ஆகவே சந்தர்ப்பம் கிடைத்த உடனேயே அவர்கள் அந்த இரு நபர்களையும் கொன்று விட்டார்கள். பிஃரே மவூனாவில் நிகழ்ந்த கொலைக்கான காரணம் பனூ ஆமிர் கோத்திரத்தின் தலைவர்களில் ஒருவனான ஆமிர் பின் துஃபைல் என்பவன் ஆவான். ஆனால் பனூ ஆமிர் கோத்திரத்து மக்கள் இந்த கொலை சம்பவத்திலிருந்து கையை விலக்கிக் கொண்டார்கள். அவர்கள் போரிடவில்லை. ஆனால் எவ்வாறு இருப்பினும், அவர்கள் ஏமாற்றியதாக இவர்கள் கருதினார்கள். ஆகவே இவர்கள் நம்முடைய எதிரிகள் என்று கருதி அவர்களை அன்னார் கொலை செய்து விட்டார்கள். அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்கள் மதீனா வந்தடைந்தபோது பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அனைத்து சம்பவத்தையும் எடுத்து கூறினார்கள். அந்த இரு நபர்களை கொலை செய்த சம்பவத்தையும் கூறினார்கள். அந்த இரு நபர்கள் கொல்லப்பட்ட செய்தியை அன்னார் (ஸல்) கேட்டபோது. அம்ர் பின் உமையா (ரலி) அவர்களின் இந்த செயலுக்காக அன்னார் (ஸல்) கடும் கோபமுற்றார்கள். அவர்களோ நம்முடன் ஒப்பந்தத்தில் இருந்தார்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஆகவே அன்னார் (ஸல்) உடனடியாக கொல்லப்பட்ட அந்த இருவருடைய இரத்த இழப்பீட்டை அவர்களின் வாரிசுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். பனூ ஆமீரைச் சார்ந்த மக்கள் பனூ நளீருக்கும் நட்புக் கோத்திரமாக இருந்தார்கள். பனூ நளீர் முஸ்லிம்களுடைய நட்புக் கோத்திரமாக இருந்தார்கள்.

ஆகவே ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த இரத்த இழப்பிட்டிற்கான பங்கில் பனூ நளீர் கோத்திரமும் பங்கெடுக்க வேண்டியது இருந்தது. ஏனெனில், முஸ்லிம்களுடன் அவர்களுக்கு பரஸ்பர ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், அவர்கள் பங்கெடுக்க வேண்டியது இருந்தது. கொஞ்சம் பங்கு அவர்களும் கொடுக்க வேண்டியது இருந்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அதன் காரணமாக தம் சில தோழர்களுடன் பனூ நளீர் குடியிருந்த இடத்தை சென்றடைந்தார்கள். அவர்களிடம் இந்த அனைத்து சம்பவங்களையும் எடுத்துக் கூறி இரத்த இழப்பீட்டிற்கான பங்கை கேட்டார்கள். இவ்வாறு தவறுதலாக கொலை செய்து விட்டார்; அதற்கான இழப்பீடு கொடுக்க வேண்டும். நாங்கள் எங்களது பங்கை கொடுக்கின்றோம். நீங்களும் எங்களுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறீர்கள். ஆகவே நீங்களும் உங்களுடைய பங்கை தாருங்கள் என்று கேட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) ஸாஹிப்) அவர்கள் எழுதுகிறார்கள்: இந்த அறிவிப்புகளை அநேக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எந்த அளவுக்கென்றால், இந்த அறிவிப்புதான் வரலாற்றில் பொதுவாக பிரபலமடைந்துள்ளது. ஆனால், இதற்கு எதிராக இமாம் ஸுஹ்ரீ அவர்களின் இந்த அறிவிப்பு சரியான ஹதீஸ்களில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. அது என்னவென்றால், பத்ர் போருக்கு பிறகு மக்கத்து தலைவர்கள் பனூ நளீர் கோத்திரத்துக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அது எந்த வருடம், எந்த மாதம் என்று குறிப்பிட்டு கூற இயலாது. அதில் நீங்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கெதிராக போர் செய்ய வேண்டும். இல்லை என்றால் நாங்கள் உங்களுக்கெதிராக போர் செய்வோம் என்று எழுதினார்கள். ஆகவே பனூ நளீர் பரஸ்பரம் ஆலோசனை செய்தார்கள். ஏதேனும் நுட்பமான முறையில் பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்து விட வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அதற்காக அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை ஏதேனும் சாக்கு போக்கு கூறி தம்மிடம் அழைக்க வேண்டும்; அங்கு சந்தர்ப்பம் கிடைத்த உடனேயே அன்னாரை கொன்று விட வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். நாங்கள் தங்களுடன் எங்களுடைய ஆலிம்களை கொண்டு மார்க்க கருத்துப் பரிமாற்றம் செய்ய விரும்புகிறோம். எங்கள் மீது தங்களுடைய உண்மை வெளிப்பட்டு விட்டது என்றால் நாங்கள் தங்கள் மீது ஈமான் கொள்வோம். ஆகவே தாங்கள் தயவு கூர்ந்து தங்களுடைய ஏதேனும் 30 தோழர்களை அழைத்துக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம். எங்கள் சார்பாகவும் 30 ஆலிம்கள் இருப்பார்கள். நாம் பரஸ்பர கருத்து பரிமாற்றம் செய்வோம் என்று அன்னாருக்கு தகவல் அனுப்பினார்கள். ஒரு பக்கம் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தியை அனுப்பி வைத்தார்கள்.

மற்றொரு பக்கம் அவர்கள் அன்னார் (ஸல்) வருகை தந்த பிறகு இந்த யூத ஆலிம்கள் தாம் மறைத்து வைத்திருக்கும் கத்தியால் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அன்னாரை கொலை செய்து விடலாம் என்று உறுதியான எண்ணம் கொண்டு அதற்கேற்ப அவர்கள் முழு ஆயத்தமும் மேற்கொண்டிருந்தார்கள். ஆனால் பனூ நளீர் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பெண்மணி ஓர் அன்ஸாரி நபரிடம் - அவர் அந்த பெண்மணிக்கு உறவுமுறையில் சகோதரராக இருந்தார்: தம் கோத்திரத்து மக்களுடைய இந்த தீய எண்ணம் குறித்து தக்க நேரத்தில் தகவல் கூறிவிட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பொழுது வீட்டிலிருந்து புறப்பட்டிருந்தார்கள். இந்த தகவல் கிடைத்த உடனேயே (அங்கிருந்து) திரும்பிச் சென்று விட்டார்கள். மேலும் உடனடியாக ஆயத்தமாகும்படி கட்டளையிட்டார்கள். ஸஹாபிகளின் ஒரு குழுவை அழைத்துக் கொண்டு பனூ நளீர் உடைய கோட்டைகளை நோக்கி புறப்பட்டார்கள். பிறகு அவர்களுடைய தலைவர்களுக்கு செய்தி அனுப்பினார்கள். இவ்வாறான நிலை இருக்கும்போது நான் உங்களை மதீனாவில் இருக்க விட முடியாது: ஆகவே நீங்கள் மீண்டும் புதிய வகையில் என்னுடன் ஒப்பந்தம் செய்து இனிமேல் நீங்கள் ஒப்பந்தத்தை முறிக்க மாட்டோம் என்றும், மோசடி செய்ய மாட்டோம் என்றும் எனக்கு நம்பிக்கையூட்டாத வரை நான் உங்களை மதீனாவில் வைத்திருக்க முடியாது என்றும் செய்தி அனுப்பினார்கள். ஆனால் யூதர்களோ ஒப்பந்தம் செய்வதை விட்டு தெளிவாக மறுத்து விட்டார்கள். இவ்வாறு அந்தப் போர் ஆரம்பமானது. பனூ நளீர் மிகவும் ஆணவமான வழிமுறையை மேற்கொண்டு கோட்டையை அடைத்துக் கொண்டு இருந்து விட்டார்கள். அதாவது மிகவும் கிளர்ச்சி செய்தவாறு ஆணவத்தை வெளிப்படுத்தியவாறு நம்மிடத்தில் ஆற்றல் உள்ளது என்று நினைத்துக் கொண்டு கோட்டைக்குள் இருந்து விட்டார்கள். யூதர்களுடைய இன்னொரு கோத்திரமான பனூ குறைழாவும் கொஞ்சம் முரண்டு பிடிக்கிறது என்று அடுத்த நாள் அன்னாருக்கு தகவல் கிடைத்தபோது அல்லது அன்னார் அறிகுறிகளைக் கொண்டு அதை தெரிந்து கொண்டபோது ஸஹாபிகளின் ஒரு படைப் பிரிவை அழைத்துக் கொண்டு பனூ குறைழாவுடைய கோட்டைகளை நோக்கி புறப்பட்டார்கள்; அவர்களை முற்றுகையிட்டார்கள். தம் இரகசியம் வெளிப்பட்டு விட்டதை பனூ குறைழா கண்டபோது அவர்கள் பயந்து மன்னிப்பு கேட்டார்கள். மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் சமாதான ஒப்பந்தத்தையும் பரஸ்பர ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கையையும் செய்து கொண்டார்கள். ஆகவே பெருமானார் ( ஸல்) அவர்கள் அவர்களுடைய முற்றுகையை அகற்றி விட்டார்கள். பிறகு பனூ நளீர் உடைய கோட்டைகளை நோக்கி புறப்பட்டார்கள். ஆனால், பனூ நளீரோ முன்பிருந்தது போன்றே தமது பிடிவாதத்திலும், பகைமையிலும் அவர்கள் இருந்தார்கள். இது ஒரு முறையான போராக மாறி இருந்தது.

இவை பனூ நளீர் போருக்கான காரணங்களாக கூறப்படுகின்ற பல்வேறு அறிவிப்புகள் ஆகும். வரலாற்று ரீதியாக முதலாவது கூறப்பட்ட அறிவிப்பு மிக சரியானதாக தெரிகிறது. மற்ற ஹதீஸ்களிலும் இந்த அறிவிப்புக்கு அதிகமான அளவில் ஆதரவு காணப்படுகிறது. ஆனால், முதலில் கூறப்பட்ட அறிவிப்பை வரலாற்று ஆசிரியர்கள் அதிகமான அளவில் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். சில சரியான ஹதீஸ்களிலும் இதன் நம்பகத்தன்மையின் பக்கம் சைகை காணப்படுகிறது. இமாம் புகாரி அவர்கள் ஸுஹ்ரீ அவர்களின் கூற்றுக்கு முன்னுரிமை அளித்த போதிலும் ஆமிர் கோத்திரத்தின் கொல்லப்பட்ட இரு நபருடைய இரத்த இழப்பீடு பற்றியும்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

எடுத்துரைத்துள்ளார்கள். ஆகவே இரு அறிவிப்புகளையும் சரியானதாக கருதி இணைத்துப் பார்க்கும்போது நம்முடைய கருத்தில் எவ்வித ஆட்சேபனையும் எழுவதில்லை. ஆயினும், போருக்கான காலத்தைக் குறித்த இந்த அறிவிப்புகளில் ஏதேனும் ஓர் அறிவிப்புக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியது வருகிறது. ஏனெனில், காலத்தை பொருத்தவரை இவ்விரண்டு அறிவிப்புகளையும் சரியானதாக ஒப்புக் கொள்ள முடியாது. பனூ நளீர் சார்பாக பல்வேறு தருணங்களில் போர் ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உருவாகி வந்தன. பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களுக்கு அவகாசம் கொடுத்துக் கொண்டே வந்தார்கள். அவர்களை கண்டும் காணாமல் இருந்து வந்தார்கள். ஆனால், பிஃரே மவூனா சம்பவத்திற்கு பிறகு இறுதியாக ஏற்பட்ட காரணத்தால் பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களின் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறி அவர்களுக்கு எதிராக படைபெயடுப்பு செய்தார்கள் என்று தெரிய வருகிறது. ஆகவே எந்த அளவுக்கு பல்வேறு விதமான காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளனவோ அவை அனைத்தும் தத்தமது இடத்தில் சரியானதாக உள்ளன. ஆனால், பனூ ஆமிரைச் சேர்ந்த கொல்லப்பட்ட இரு நபர்களுடைய இழப்பீட்டை கேட்டுச் சென்ற போது நிகழ்ந்த சம்பவம் இந்த போருக்கான இறுதி தூண்டுகோலாக அமைந்தது. எது சரி என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

நான் எடுத்துக் கூறிய இந்த அனைத்தும் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (என்ற நூ)லி(ல் இ)ருந்து எடுக்கப்பட்டதாகும். பிறகு எழுதப்பட்டுள்ளதாவது: பனூ நளீர் பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்ய வேண்டும் என்ற அசுத்தமான சூழ்ச்சியும் செய்தார்கள். இதுவும் இந்தப் போருக்கான ஒரு காரணமாக அமைந்தது. இதைக் குறித்து ஏற்கனவே கூறப்பட்டது போன்று, இழப்பீடு தொடர்பாக அன்னார் ஸஹாபிகளின் ஒரு குழுவுடன் பனூ நளீருக்கு சென்றார்கள். அன்னார் (ஸல்) சனிக்கிழமையன்று புறப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளின் ஒரு குழுவுடன் குபா பள்ளிவாசலில் தொழுகையை நிறைவேற்றினார்கள். பிறகு ஒப்பந்தத்திற்கு ஏற்ப பனூ நளீரிடம் சென்று இழப்பீடு கேட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த ஸஹாபிகளுடன் சென்றார்களோ அவர்களுடைய எண்ணிக்கை 10-ஐ விடவும் குறைவாக இருந்தது. அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி) ஆகியோரும் இருந்தார்கள் என்று அறிவிப்பில் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி), ஹஸ்ரத் உஸைத் பின் ஹுஸைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸஃது பின் உபாதா (ரலி) ஆகியோரின் பெயர்களும் காணக்கிடைக்கின்றன.

பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு சென்றடைந்ததும் இழப்பீட்டை பற்றி யூதர்களிடம் பேசினார்கள். அப்போது. நிச்சயமாக அபூ காஸிம் அவர்களே! முதலில் தாங்கள் உணவு உண்ணுங்கள் ; பிறகு தங்களுடைய வேலையின் பக்கம் வருகிறோம் என்று அவர்கள் கூறினார்கள். இவ்வாறு யூதர்கள் வெளிப்படையான முறையில் மிகவும் நல்ல விதமாக அன்னாருடன் பேசினார்கள். ஆனால், அதற்கு பின்னால் அன்னாரை கொலை செய்வதற்காக திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களுடைய வீடுகளின் சுவருக்கு அருகில் அமர்ந்திருந்தார்கள். அப்போது, யூதர்கள் தமக்குள் ஆலோசனை செய்தார்கள். அன்னாரை கொலை செய்வதற்கு உங்களுக்கு இதை விட சிறந்த வாய்ப்பு கிடைக்காது. ஆகவே வீட்டின் கூரைக்கு மேலே ஏறி சுவரின் மேலே இருந்து பெரும் பாறையை அன்னாரின் மீது யார் போடுவார்? அதன் மூலமாக நமக்கு அன்னாரிடமிருந்து இரட்சிப்பு கிடைத்து விடும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

இன்னோர் எழுத்தாளர் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்: அம்மக்களின் தலைவரான ஹுயய் பின் அக்தப் என்பவர், யூத கூட்டமே முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் சில தோழர்களுடன் உங்களிடத்தில் வந்துள்ளார். அவர்களின் எண்ணிக்கை 10-ஐ விடவும் குறைவாக உள்ளது. இந்த வீட்டின் மேலே இருந்து பெரும் பாறையை எறிந்து முஹம்மத் (ஸல்) அவர்களை கொன்று விடுங்கள். உங்களுக்கு இதை விட சிறந்த வாய்ப்பு மீண்டும் கிடைக்காது. அவர்களை கொன்று விட்டால் அவர்களின் தோழர்கள் சிதறிப் போய்விடுவார்கள். மக்காவிலிருந்து வந்த அவர்களின் தோழர்கள் திரும்ப மக்காவுக்கு சென்று விடுவார்கள். இங்கு அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தினர் எஞ்சி விடுவார்கள். அவர்கள் உங்களுடைய நட்பு கோத்திரங்கள் ஆவார்கள். ஆகவே நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதை இப்பொழுதே செய்து விடுங்கள் என்று கூறினார். அப்போது அம்ர் பின் ஜஹாஷ் என்ற தீய இயல்புடைய ஓர் யூதன், நான் அந்த வீட்டின் மேலே ஏறி பாறையை எறிந்து முஹம்மது (ஸல்) அவர்களை(நவூதுபில்லாஹ்) கொலை செய்து விடுவேன் என்று கூறினான். இந்த அனைத்து ஆலோசனைகளும் நடந்து கொண்டிருக்கும்போது பனூ நளீர் உடைய ஒரு தலைவர் ஸலாம் பின் முஷ்கம் என்பவர், யூத கூட்டத்தினரே! நீங்கள் வாழ்நாள் முழுவதும் எனக்கு எதிர்ப்பு தெரிவித்துக் கொள்ளுங்கள்: ஆனால், இன்று என்னுடைய விஷயத்தை நீங்கள் ஒப்புக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்களுக்கு உங்களுடைய இந்த எண்ணத்தை குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டு விடும்: இது நமக்கும் அவர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு எதிரானதாகும் என்று கூறினார். ஆனால், யூதர்களோ அவருடைய எந்த விஷயத்தையும் கேட்கவில்லை. தமது எண்ணத்தில் உறுதியாக இருந்தார்கள்.

இதற்கு பிறகு நிகழ்ந்த விஷயங்களை இன்ஷா அல்லாஹ் இனி வரக் கூடிய காலத்தில் எடுத்துரைப்பேன். அவர்கள் கொலை செய்வதற்கு என்ன திட்டம் தீட்டினார்கள்? என்பதைப் பற்றியும், பெருமானார் (ஸல்) அவர்களை அல்லாஹ் எவ்வாறு காப்பாற்றினான்? அவர்களுடைய திட்டத்தை எவ்வாறு தோல்வியடையச் செய்தான் என்பதைப் பற்றியும் (பின்வரும் காலத்தில் எடுத்துக்) கூறுவேன்.

இறுதியில் நான் பாகிஸ்தானுடைய அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆவுக்காக கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அவர்கள் மீது தற்போது மீண்டும் கடுமைகள் காட்டப்பட்டு வருகின்றன. அல்லாஹ் வெகு விரைவில் பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்கும் அவர்களின் அநீதியாளர்களிடமிருந்து இரட்சிப்பை வழங்குவானாக! அங்கும் நமது நிலைமைகள் சிறந்ததாக ஆகட்டுமாக. சின்ன சின்ன விஷயங்களுக்காகவும் வழக்குகள் தொடரப்படுகின்றன. நெருக்கடிகள் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்குப் பிறகு நான் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன்; ஜுமுஆவுக்குப் பிறகு. அவர்களின் நற்குறிப்பை இப்பொழுது கூறி விடுகின்றேன்.

முதலாவது குறிப்பு மதிப்பிற்குரிய குலாம் சர்வர் ஸாஹிப் ஷஹீத் ஆவார்கள். இவர்கள் மதிப்பிற்குரிய பஷீர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். இரண்டாவது நற்குறிப்பு, ராஹத் அஹ்மத் பாஜ்வா ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் மதிப்பிற்குரிய முஷ்தாக் அஹ்மத் பாஜ்வா ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். இவர்கள் ஸஅதுல்லாஹ் பூர், மண்டி பஹாவுத்தீன் மாவட்டத்தில் வசிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ஜுன் 8 ஆம் தேதி இவர்கள் ஷஹீதாக்கப்பட்டுள்ளார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அஹ்மதிய்யத்தின் எதிரி ஒருவன் குலாம் சர்வர் ஸாஹிப் மற்றும் ராஹத் பாஜ்வா ஸாஹிப் ஆகியோரை ஒருவர் பின் ஒருவராக சுட்டு ஷஹீதாக்கியுள்ளான். ஷஹாதத்தின் போது குலாம் சர்வர் ஸாஹிப் ஷஹீத் அவர்களின் வயது 64 ஆகும். ராஹத் பாஜ்வா ஸாஹிப் ஷஹீத் அவர்களின் வயது 32 ஆகும்.

விவரத்தின் அடிப்படையில், குலாம் சர்வர் ஸாஹிப் ஷஹீத் அவர்கள் சஅதுல்லாஹ் பூரில் உள்ள அஹ்மதிய்யா பள்ளிவாசலில் லுஹர் தொழுது விட்டு தம் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள். வீட்டுக்கு அருகில் சையது அலீ ரஸா என்ற பெயருடைய அஹ்மதிய்யத்தின் எதிரி ஒருவன் - இவன் உள்ளூர் மதரஸாவில் மாணவனாக இருக்கின்றான். இவன் குலாம் சர்வர் ஸாஹிப் அவர்களை பின்தொடர்ந்து சென்று துப்பாக்கியால் சுட்டுள்ளான். தலையில் குண்டடிப்பட்டதன் காரணமாக அவர்கள் சம்பவ இடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள். சம்பவம் நிகழ்ந்த பிறகு கொலையாளி அங்கிருந்து சென்று விட்டான். அந்த கிராமத்தின் இன்னொரு பகுதிக்கு சென்று அங்கு மதிப்பிற்குரிய ராஹத் அஹ்மது பாஜ்வா ஸாஹிப் என்ற இன்னோர் அஹ்மதியையும் துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கியுள்ளான். அதற்குப் பிறகு கொலையாளியின் கைது நடவடிக்கை அமலுக்கு வந்துள்ளது. இந்த சம்பவங்களுக்கு பிறகு கொலையாளி போலீஸிடம் தமது ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுக்கும்போது, அவர்களை நான்தான் கொன்றேன்; சொர்க்கத்தை பெறுவதற்காக இந்த அனைத்தையும் நான் செய்தேன் என்று அவன் கூறியுள்ளான். எனக்கு வேறு ஏதேனும் அஹ்மதிகள் தென்பட்டிருந்தால் நான் அவர்களின் உயிரை எடுப்பதற்கும் தயங்கி இருக்க மாட்டேன் என்றும் கூறியுள்ளான்.

இது மௌலவிகளால் கற்றுக் கொடுக்கப்பட்ட இஸ்லாமிய போதனை ;மக்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் ஆகும். இவ்வாறான இஸ்லாமிய போதனையை அவர்கள் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இஸ்லாத்திற்கு அவப் பெயரை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களை விரைவில் பிடிப்பதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்வானாக!

பஷீர் அஹ்மது ஸாஹிப் அவர்களின் மகனாகிய ஷஹீது குலாம் சர்வர் ஸாஹிப் அவர்களின் குடும்பத்தில் அவர்களுடைய கொள்ளுத் தாத்தா ஹஸ்ரத் ஷரஃபுதீன் ஸாஹிப் (ரலி) அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் பிளேக் நோயின் அடையாளத்தைக் கண்டு தாக்கத்திற்குள்ளாகி ஸஅதுல்லாஹ்பூரைச் சார்ந்த பிற நபர்களுடன் சேர்ந்து ஹஸ்ரத் மௌலானா குலாம் ரஸூல் ஸாஹிப் ராஜிகீ (ரலி) அவர்கள் மூலமாக கடிதம் எழுதி பைஅத் செய்திருந்தார்கள். பிறகு 1903-ம் ஆண்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஜெஹ்லம் வழக்கு தொடர்பாக ஜெஹ்லம் வந்திருந்த போது, அன்னாரை தரிசிக்கும் நல்வாய்ப்பையும் பெற்றார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்கள் இறையருளால் வஸிய்யத் அமைப்பிலும் இணைந்திருந்தார்கள். ஐவேளைத் தொழுகையை ஜமாஅத்தாக தொழக் கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழுகையை பேணக் கூடியவராகவும் இருந்தார்கள். அதிகமாக தரூது ஷரீஃப் ஓதக் கூடியவராகவும், நஃபில் நோன்புகள் மட்டுமின்றி திருக்குர்ஆனை குறிப்பாக ஓதும் பழக்கம் உடையவராகவும் இருந்தார்கள். அதுமட்டுமின்றி, ஜமாஅத் நூல்களை முறையாக வாசிக்கும் பழக்கமுடையவராகவும் இருந்தார்கள். ஜமாஅத்துக்காக தினந்தோறும் இரு ரக்அத் நஃபில் தொழுகின்ற பழக்கமுடையவராகவும் இருந்தார்கள். தினந்தோறும் ஸதகா கொடுக்கும் பழக்கமுடையவராகவும் இருந்தார்கள். தேவையுடையவர்களுக்கு மறைவாக உதவி செய்து வந்தார்கள். கையேந்திய எவரையும் தம் வீட்டை விட்டு வெறுங்கையுடன் அனுப்ப மாட்டார்கள். உள்ளூர் ஜமாஅத்தின் ஜெனரல் செகரட்டிரியாக பணியாற்றியது மட்டுமின்றி சஅதுல்லாஹ்பூருடைய முரப்பி அத்ஃபாலாகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்துள்ளது. மர்ஹூமுக்கு தப்லீஃக்கிற்கான மிகுந்த ஆர்வம் இருந்தது. பல நல்ல உள்ளங்கள் இவர்களின் மூலமாக பைஅத் செய்யும் நல்வாய்ப்பு பெற்றுள்ளன. கடந்த காலத்தில் கலிமா தொடர்பான விவகாரத்தில் இதர மக்களுடன் மூன்று நாட்கள் வழக்கு பதியப்படாமல் இறைவழியில் கைதாகி இருக்கும் நல்வாய்ப்பும் இவர்களுக்கு கிடைத்துள்ளது.

மாவட்ட காயித் ஆக இருக்கும் ஷாஹித் இம்ரான் என்பவர் மர்ஹூம் அவர்களின் சகோதரருடைய மகனும் ஆவார். அவர் கூறுகிறார்: ஷஹீது மர்ஹூம் அவர்கள் மீண்டும், மீண்டும் தமது ஒரு விருப்பத்தை வெளிப்படுத்தி வந்தார்கள். அது என்னவென்றால், அல்லாஹ் தமக்கு எப்படிப்பட்ட ஒரு வேலைக்கான நல்வாய்ப்பை வழங்க வேண்டும் என்றால் அதன் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் தம் பெயர் பொன் எழுத்துகளால் எழுதப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். அல்லாஹ் அவர்களின் இந்த விருப்பத்தை இவ்வாறு பூர்த்தி செய்துள்ளான்.

மர்ஹூம் அவர்கள் தம் பின்னால் விட்டு சென்றவர்களுள் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய ஸாஜிதா பர்வீன் ஸாஹிபா அவர்களுடன் இரு மகன்களையும் நான்கு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களின் மகள்களில் இருவர் சிறுவயதுடையவர் ஆவர். ஒருவர் எஃப் எஸ். ஸி-யில் படித்து வருகிறார். இன்னொருவர் மெட்ரிக் இல் படிக்கிறார். மற்ற பிள்ளைகள் திருமணமானவர்கள் ஆவார்கள். மர்ஹூமிடத்தில் கட்டுப்படக் கூடிய பண்பு முழுமையானதாக இருந்தது. ஜமாஅத்தின் தலைவர் அவர்கள் கூறுகிறார்கள். ஷஹீத் மர்ஹூமுடன் அவருக்கு உறவு முறையும் இருந்தது. சில சமயங்களில் சச்சரவுகள் ஏற்படுவதுண்டு. பரஸ்பர தொடர்புகளில் ஏற்றத்தாழ்வுகள் வருவதுண்டு. ஆனால், ஜமாஅத் விவகாரம் என்று வரும்போது, தாங்கள் ஜமாஅத் தலைவர் ஆவீர்கள்; தாங்கள் என்ன கூறினாலும் அதற்கு நான் முழுமையாக கட்டுப்படுவேன் என்று மர்ஹூம் கூறுவார்கள். இவ்வாறான முன்னுதாரணத்தை அவர்கள் காட்டினார்கள்.

மக்களுடைய பல முறையீடுகள் வருவதை பார்க்கின்றோம். தம் தனிப்பட்ட பகைமையின் காரணமாக ஜமாஅத் அமைப்புடன் ஒத்துழைப்பு தருவதில்லை என்பதை பார்க்கின்றோம். ஆனால், மர்ஹூம் அவர்கள் ஒருபோதும் இவ்வாறான விஷயத்தை வெளிப்படுத்தியது கிடையாது. முழுமையான கட்டுப்படுதலுடன் ஜமாஅத் அமைப்பிற்கு கீழ்படிந்துள்ளார்கள்.

மாவட்ட முரப்பியான மலிக் அமானுல்லாஹ் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: குலாம் சர்வர் ஸாஹிப் அவர்களை குறித்து நான் கண்டுணர்ந்த விஷயம் என்னவென்றால், பள்ளிவாசலுக்கு எப்பொழுதும் முதலில் வந்து முதல் வரிசையில் வலப்பக்கமாக அமர்ந்து விடுவார்கள். இறை தியானத்தில் மூழ்கி இருப்பார்கள். மிகவும் பணிவுள்ள, அமைதியான இயல்பை கொண்டவராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் குறிப்பான நேசம் இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களை வாசிக்கும் ஆர்வமும் கொண்டிருந்தார்கள். தப்லீஃக் ஆர்வமும் இருந்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கேள்வி பதில் மற்றும் இதர ஆடியோ வீடியோக்களையும் தம்மிடத்தில் வைத்திருப்பார்கள். அவற்றை மிக ஆர்வத்துடன் கேட்டு வந்தார்கள்; பார்த்து வந்தார்கள்.

ஒரு முரப்பி கூறுகிறார்: பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டு நான் அதில் ஷஹீதாகி விட்டதாக கனவு கண்டேன்.முரப்பி ஸாஹிப் அவர்கள் இந்த கனவை மர்ஹூம் அவர்களுக்கு கூறியபோது ஷஹீது மர்ஹூம் அவர்கள், முரப்பி ஸாஹிப் அவர்களே! முதலில் தாங்கள் ஷஹீது ஆகிறீர்களா? அல்லது நான் ஆகிறேனா? என்று பார்ப்போம் என்றார்கள்.

முன்பே அவர்களுக்கு அது குறித்து ஏதேனும் அறிகுறி தெரியப்படுத்தப்பட்டிருக்கலாம். அதன் காரணமாக அவர்கள் இந்த விஷயத்தை பேசி இருக்கலாம். அல்லாஹ் அவர்களின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அவர்களின் சந்ததிகளிடத்திலும் அவர்களின் நன்மையை தொடரச் செய்வானாக! முழுமையான நன்றியுணர்வுடன் அவர்கள் வாழக் கூடிய நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவானாக!

அடுத்த நற்குறிப்பு மதிப்பிற்குரிய ராஹத் அஹ்மத் பாஜ்வா ஸாஹிப் ஷஹீது அவர்களுடையதாகும். இவர்கள் முஷ்தாக் அஹ்மத் பாஜ்வா ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். விவரத்திற்கு ஏற்ப, ராஹத் பாஜ்வா ஸாஹிப் அவர்கள் சஅதுல்லாக்பூர் பஸ் ஸ்டாப்பில் உள்ள தமது சமையல் சென்டரில் இருந்து தம் வீட்டுக்கு திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள். மேற்கூறப்பட்ட செய்யது அலீ ரஸா என்ற கொலையாளி அவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டான். தலையில் குண்டடி பட்டதன் காரணமாக சம்பவ இடத்திலேயே அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். ராஹத் அஹ்மது ஸாஹிப் ஷஹீது அவர்களின் குடும்பத்தில் அவர்களுடைய பாட்டனார் மதிப்பிற்குரிய ரஷீத் அஹ்மது ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் தம் சகோதரரான மதிப்பிற்குரிய ஹபீஸுல்லாஹ் ஸாஹிப் அவர்கள் மூலமாக 1978 -ல் பைஅத் செய்திருந்தார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் அமைப்பில் இணைந்திருந்தார்கள். எப்பொழுது எந்தவோர் அஹ்மதியின் ஷஹாதத் பற்றியும் அவர்கள் கேள்விப்படும்போதெல்லாம் மிகவும் ஏக்கத்துடன் (இந்த) அந்தஸ்து நற்பேறு பெற்றவர்களுக்குத்தான் கிடைக்கும் என்று கூறிவந்தார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் அளப்பெரிய நேசம் வைத்திருந்தார்கள். விருந்தோம்பல் பண்பு அவர்களிடத்தில் மிகைத்து காணப்பட்டது. மிகவும் இன்முகத்துடன் காணப்படுவார்கள். எல்லாருடனும் அன்புடன் பரிமாறுவார்கள். யாராவது எதிர்மறையாக நடந்து கொண்டால் அவருடன் நேர்மறையாக நடந்து கொள்வார்கள். 2018 ஆம் ஆண்டில் காதியான் சென்றிருந்த போது எல்லா நேரமும் பள்ளிவாசல் அல்லது பைத்துத் துஆவில் துஆக்களில் மூழ்கி இருந்தார்கள். எப்பொழுது ஜமாஅத் தொண்டுக்காக அழைக்கப்பட்டாலும் உடனடியாக தம் அனைத்து வேலைகளையும் விட்டு விட்டு ஆஜராகி விடுவார்கள். ஜமாஅத் நிகழ்ச்சிகளின் போது விருந்தினர்களுக்காக அவர்களே உணவு சமைத்து வந்தார்கள். ஏனெனில், அவர்களுக்கு சொந்தமான ஹோட்டல் ஒன்றும் இருந்தது. வக்ஃப் செய்து தாருஸ் ஸியாஃபத்துக்கு சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்று அவர்கள் விருப்பப்பட்டு வந்தார்கள்.

இவர்களுடைய களின் ஒருவர் ஜாமிஆவில் படிக்கிறார். அவர் கூறுகிறார்: மர்ஹூம் அவர்கள் என்னை சந்திக்கும் போதெல்லாம், ஒருபோதும் நன்றி மறந்து விடக் கூடாது. இறுதி மூச்சு வரை தமது நன்றி உணர்வை நிறைவேற்ற வேண்டும். அப்பொழுதுதான் நமது குடும்பத்திற்கு பெருமை சேர்க்கக் கூடியவனாக நீ ஆவாய்! என்று அறிவுரை கூறி வந்தார்கள்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் பின்விட்டு சென்றவர்களுள் பெற்றோர் மட்டும் இன்றி அவர்களின் மனைவி அமத்துன் நூர் ஸாஹிபா என்ற மனைவியும் இரு மகள்களும் அடங்குவர். ஜுவைரியா என்ற மகளுக்கு நான்கு வயதாகிறது. ஸிமல் ராஹத் என்ற மகளுக்கு ஒன்றரை வயதாகிறது. அல்லாஹ் இந்த ஷஹீதுகளுக்கு ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸில் உயரிய அந்தஸ்தை வழங்குவானாக!அவர்களுடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக! பின்விட்டுச் சென்ற அனைவருக்கும் அழகிய பொறுமையை வழங்குவானாக! அவர்களை தம் பாதுகாப்பிலும், அடைக்கலத்திலும் வைத்திருப்பானாக.

இத்துடன் இன்னொரு ஜனாஸாவும் உள்ளது. மதிப்பிற்குரிய மலிக் முஸஃப்பர் கான் ஸாஹிப் ஜோயா அவர்களுடையதாகும். இவர்கள் கடந்த நாட்களில் 93 வயதில் மரணமடைந்திருக்கின்றார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வுடைய அருளால் மூஸியாக இருந்தார்கள். இவர்களுடைய மகன் முஹம்மது மதீவுல்லாஹ் ஜோயா ஸாஹிப் அவர்கள் ஜமாஅத்தின் முரப்பி ஆவார்கள். ஹவாய் இல் தொண்டாற்றுகிறார். பயண ஆவணங்கள் இல்லாததன் காரணமாக தந்தையினுடைய ஜனாஸா மற்றும் நல்லடக்கத்தில் கலந்து கொள்ள இயலவில்லை. முரப்பி ஸாஹிப் எழுதுகிறார்கள்: தந்தை, மார்க்கப்பற்று மிக்கவராகவும் இறையச்சம் கொண்டவராகவும் ஏழைகளை பராமரிக்கக் கூடியவராகவும் தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் ஐவேளை தொழுகைகளை கடைபிடிக்க கூடியவராகவும் முறையாக திருக்குர்ஆனை பொருளுடன் ஓதக் கூடியவராகவும் ஒரு நல்ல தூய மனிதராகவும் இருந்தார்கள். 24 வயதில் 1953 ஆம் ஆண்டில் அவர்கள் சுயமே அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் காரணமாக அவர்களிடத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டது. அப்போதிலிருந்து அவர்கள் இறைவணக்கம், கிலாஃபத்தில் நன்றி உணர்வு மற்றும் மனிதகுல தொண்டு ஆகியவற்றில் முன்னுதாரணமான வாழ்வை வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் தங்களுடைய வாழ்வில் பல்வேறு வகையில் ஜமாஅத்துக்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். 15 வருடங்களாக தம் ஜமாஅத்தான சக் 152 ஷுமாலியில் தலைவராகவும் இருந்துள்ளார்கள்.

கூறுகிறார்: அவர்களுடைய நாவில் இருந்து ஒருபோதும் எந்த ஒரு பொறுப்பாளரை குறித்தும் எந்தவொரு முறையீடோ, புகாரோ கேட்டது கிடையாது. ஜமாஅத் பொறுப்பாளர் அவர் சாயிக் ஆக இருந்தாலும் சரி. உங்களுடைய வீட்டுக்கு வந்தால் அவர் கலீஃபாவுடைய பிரதிநிதியாக இருக்கின்ற காரணத்தால் அவருக்கு கண்ணியம் கொடுப்பது உங்கள் மீது கடமையாகும் என்று எப்பொழுதும் அறிவுரை செய்து வந்தார்கள். தாமும் செயல் ரீதியாக எப்பொழுதும் ஜமாஅத்தினுடைய விருந்தினர்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும் குறிப்பாக கண்ணியம் கொடுத்து வந்தார்கள்.

நான் வஸிய்யத் குறித்து கவனமூட்டிய போது 2005-ம் ஆண்டில் மர்ஹூம் அவர்கள் ஏற்கனவே மூஸியாக இருந்தார்கள். எனவே நான் எவ்வாறு இந்த திட்டத்தில் பங்கெடுப்பது? என்று அவர்கள் கூறிவந்தார்கள். ஆக, அவர்கள் தமது வஸிய்யத்தை பத்தில் ஒரு பங்கில் இருந்து மூன்றில் ஒரு பங்கு ஆக ஆக்கிவிட்டார்கள். விகிதாச்சாரத்தை அதிகரித்துக் கொண்டார்கள். தம் குழந்தைகளிடம், பொருள் தியாகம் மற்றும் சந்தாக்கள் என்பது உண்மையில் மனிதன் முதல் நேரத்திலேயே கொடுப்பதாகும். செகரட்டரி மால் நினைவுபடுத்துவதற்கு வாய்ப்பே கொடுக்கக் கூடாது என்று கூறி வந்தார்கள். பென்ஷன் வரும்போது அவர்கள் அதில் அனைத்தையும் விட முதலில் சந்தாவுக்காக கொடுத்து விடுவார்க்ள. 1990-ன் இறுதியில் நமது ஜமாஅத்துக்கு முரப்பி ஹவுஸ் உடைய தேவை ஏற்பட்ட போது கிராமத்துக்குள் பள்ளிவாசலுக்கு அருகில் இருந்த தமது நிலத்தை எவ்வித தயக்கமும் இன்றி அன்பளிப்பாக ஜமாஅத்துக்கு கொடுத்து விட்டார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவர்களின் நன்மைகளை அவர்களுடைய சந்ததிகளுக்கும் தொடர்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி A.P.A தாரிக் அஹ்மத்

* * * * *

**(மல்ஃபூஸாத்)1-ம் பக்கத் தொடர்ச்சி.....**

விலங்குகளில் உதாரணமாக குதிரை போன்றவற்றில் இருப்பதைப் போன்று முந்தி செல்கின்ற ஆசை உருவாகுவதில்லை. ஆக, ஒருவகையில் ஒட்டகத்தின் இயல்பில் இருக்கும் இமாமை பின்தொடர்வதற்கான விவகாரம் என்பது ஓர் ஒப்புக் கொள்ளப்பட்ட விவகாரம் ஆகும். எனவே அல்லாஹ்

أَفَلَا يَنْظُرُوْنَ إِلَى الْإِبِلِ كَيْفَ خُلِقَتْ

என்று கூறி ஒரே வரிசையில் சென்று கொண்டிருக்கின்ற அந்த ஒட்டகத்தின் ஒட்டுமொத்த நிலைமையின் பக்கம் சுட்டி காட்டியுள்ளான். அது போன்று நாகரீகம் மற்றும் ஒன்றுபட்ட சூழலை நிலைநிறுத்துவதற்கு ஓர் இமாம் இருப்பது அவசியம் ஆகும். அடுத்து இதனையும் நினைவில் கொள்ள வேண்டும்; அதாவது, இந்த (ஒழுங்கமைப்பைக் கொண்ட) வரிசை (ஒட்டகங்களிடம்) பயணத்தின் நேரத்தில் இருக்கின்றது. எனவே உலகப் பயணத்தை மேற்கொள்வதற்கு ஓர் இமாம் இல்லாத வரை மனிதன் தட்டுத்தடுமாறி அழிந்து விடுவான். அடுத்து ஒட்டகம் மிகவும் நடக்கக் கூடியதாக இருக்கின்றது. இதிலிருந்து பொறுமை மற்றும் சகிப்புத் தன்மைக்கான படிப்பினை கிடைக்கின்றது.

அடுத்து, ஒட்டகத்தின் சிறப்பு என்னவென்றால், நீண்ட பயணங்களில் பல நாட்களுக்கு தண்ணீரை சேமித்து வைக்கின்றது; அது கவனக்குறைவாக இருப்பதில்லை. எனவே நம்பிக்கையாளரும் எந்நேரமும் தமது பயணத்திற்கு தயாராகவும், விழிப்புணர்வோடும் இருக்க வேண்டும். மேலும் சிறந்த வழிப்பாதை உணவு என்பது இறையச்சம் ஆகும்.

فَإِنَّ خَيْرَ الزَّادِ التَّقْوٰى

.(2:198).

يَنْظُرُوْنَ

என்பதிலிருந்து இந்த விஷயம் தெரிய வருகின்றது. அதாவது, இவ்வாறு பார்ப்பது என்பது குழந்தைளைப் போன்று பார்ப்பது அல்ல. மாறாக, இதிலிருந்து பின்பற்றுதலுக்கான படிப்பினையைப் பெற வேண்டும். அதாவது, ஒட்டகத்திடம் உள்ள சமூக மற்றும் ஒன்றுபட்ட சூழலைப் போன்றும், மேலும், அவற்றில் இமாமைப் பின்பற்றிச் செல்கின்ற ஆற்றலைப் போன்றும் மனிதன் தனது இமாமைப் பின்பற்றிச் செல்வதை தனது அடையாளமாக ஆக்கிக் கொள்வது அவனுக்கு அவசியமாகும். ஏனெனில், அவனுக்கு சேவகம் செய்யக் கூடிய அந்த ஒட்டகத்திடம் கூட அந்தத் தன்மை இருக்கின்றது.

كَيْفَ خُلِقَتْ

என்பதில் இபிலி எனும் அந்த ஒட்டகத்தின் ஒட்டு மொத்த நிலையிலிருந்து கிடைக்கின்ற அந்த ஒட்டுமொத்த நன்மைகளின் பக்கம் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 18, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * *

**(தஃப்ஸீரே கபீர்)1-ம் பக்கத் தொடர்ச்சி..**

அவர் கூறினார்: அசல் விஷயம் என்னவென்றால், எங்கள் பகுதியில் ஹாஜியின் கடையிலிருந்து மக்கள் அதிகம் பொருட்களை வாங்குகின்றனர். எங்கு எங்களது கடை இருக்கின்றதோ அங்கு அதற்கு போட்டியாக மற்றொரு நபரின் ஒரு கடையும் இருக்கின்றது. அவர் ஹஜ் செய்து வந்துள்ளார். மேலும் அவர் தமது கடையில் ஹாஜி என்று போர்ட் வைத்துள்ளார். அதன் விளைவாக எங்களது வாடிக்கையாளர் கூட அங்கே சென்று விடுகின்றனர். இதைக் கண்டு, நீயும் ஹஜ் செய்து வந்தால் திரும்பி வந்து நீயும் உனது கடையில் ஹாஜி என்று போர்ட் வைத்துக் கொள்ள முடியும் என்று எனது தந்தை என்னிடம் கூறினார்.

இப்போது கூறுங்கள். இந்த இந்த நபரின் ஹஜ் அவருக்கு நற்கூலிக்கு காரணியாக அமையுமா? நற்கூலிக்கான கேள்வி என்பது இருக்கட்டும்; அவரது ஹஜ் அவருக்கு நிச்சயமாக பாவத்திற்கான காரணியாக அமைந்திருக்கும். எனவே மனிதன் தனது அனைத்து பணிகளிலும் எப்போதும் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும்; அதாவது, நல்ல நல்ல பணிகளை செய்யும்போதும் கூட இறைவனின் திருப்தியை கருத்தில் கொள்ள வேண்டும்; இல்லையென்றால் அதே நன்மை அவருக்கு அழிவு மற்றும் தண்டனைக்கு காரணியாக அமைந்து விடும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 35. காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

W,A ABDUL AZEEZ
Proprietor
mob: 7358346786
off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

# ஜுமுஆ பேருரை

**ஸரிய்யா பிஃரே மவூனா போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள்**

**அநீதிகளுக்கு ஆளாகி வரும் பாலஸ்தீன மக்களுக்காகவும் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்வதற்கான அறிவுரை**

ஸஹாபிகள் இறைவனின் வழியில் கொல்லப்படுவதிலேயே தங்களுக்கு நிம்மதி இருப்பதாக உணர்ந்தார்கள். ஸஹாபிகளின் இப்படிப்பட்ட பெரும்பாலான சம்பவங்கள் நமக்கு வரலாற்றிலிருந்து கிடைக்கின்றன

ஸரிய்யா பிஃரே மவூனா போருக்குப் சென்றவர்களில் அனைவருமே இளைஞர்களாக இருந்தனர். அவர்கள் திருக்குர்ஆனை முறையாக ஓதக் கூடியவர்களாக இருந்ததன் காரணத்தினால் மக்கள் அவர்களை குர்ராஃ என்ற பட்டத்தால் நினைவு கூர்ந்து வந்தனர்

ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பிஃரே மவூனா வாசிகளே! நான் உங்களிடத்தில் அல்லாஹ்வின் தூதரால் அனுப்பப்பட்ட தூதுவர் என்ற ரீதியில் வந்துள்ளேன்; அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவருமில்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியார் மற்றும் தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சியம் அளிக்கின்றேன். நீங்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது ஈமான் கொள்ளுங்கள்

இஸ்லாம் வாளின் அழுத்தத்தால் வெற்றி பெறவில்லை. மாறாக உள்ளங்களில் இறங்கிய அந்த உயர்தரமான போதனைகளின் மூலமாக வெற்றி பெற்றது. மேலும் ஒழுக்கங்களில் ஒரு உயர்தரமான மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது

(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள்)

அம்ர் பின் துஃபைல் அந்தத் தாக்குதலுக்கு பிறகு உயிருடன் இருந்தான். அவனை இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சாபம் பற்றியது. மேலும் அவனுக்கு பிளேக் நோய் ஏற்பட்டது. அதன் காரணமாக அவன் குஃப்ரின் நிலையில் மாண்டு போனான்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 ஜுன் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **07ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி......**

பிஃரே மவூனா உடைய ஷஹீதுகளைக் குறித்து எழுதப்பட்டுள்ளதாவது: மகாசி வாசிகளுடைய ஒருமித்த கருத்து என்னவென்றால், இந்தப் போரில் ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ மற்றும் கஅப் பின் ஸைத் ஆகியோரைத் தவிர மற்ற அனைத்து ஸஹாபிகளும் ஷஹீதாக்கப்பட்டார்கள் என்பதாகும். ஹஸ்ரத் கஅப் பின் ஸைத் (ரலி) அவர்கள் பிஃரே மவூனா நாளில் காயமடைந்து போனார்கள். அவர்கள் அகழ் போரில் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்கள் முஆவியா அவர்களின் காலத்தில் மரணமடைந்தார்கள்.இந்தப் போரில் கலந்து கொண்ட அனைத்து ஸஹாபா பெருமக்களின் பெயர்களும் வரலாற்று நூல்களிலும், வாழ்க்கை வரலாற்று நூல்களிலும் இடம்பெறவில்லைதான்; எனினும் ஷஹீதானவர்களில் 29 ஸஹாபா பெருமக்களுடைய பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அச்சடிக்கப்படும் போது அப்பெயர்கள் கூறப்படும். இப்போது அவர்களுடைய பெயரை நான் எடுத்துக் கூறவில்லை. 29 பெயர்கள் உள்ளன. நீண்ட பட்டியல் ஆகும்.

எவ்வாறு இருப்பினும். உயிர் தப்பிய ஸஹாபிகளை குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இந்தப் போரில் கலந்து கொண்ட ஸஹாபிகளில் இருவர் அதாவது ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ மற்றும் ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது ஆகியோர் ( உயிர் தப்பினார்கள்). சில வரலாற்றாசிரியர்களை பொருத்த வரை முன்ஸிர் அவர்களுக்கு பதிலாக ஹாரிஸ் பின் சிம்மஹ் இருந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் அந்நேரத்தில் ஒட்டகங்கள் போன்ற கால்நடைகளை மேய்ப்பதற்காக தம் குழுவை விட்டு தனியாக இங்குமங்கும் சென்றிருந்தார்கள். அவர்கள் தூரத்திலிருந்து முகாமை பார்த்தபோது அங்கு பறவை கூட்டம் சுற்றுவதை கண்டார்கள். பாலைவனத்து தடயங்களை நன்கு அறியக் கூடியவர்களாக அவர்கள் இருந்தார்கள். போர் நடைபெற்றுள்ளது என்பதை உடனே அவர்கள் புரிந்து கொண்டார்கள். அவர்கள் திரும்பி வந்தபோது, அநீதியாளர்களான காஃபிர்களின் இரத்த வெறி பிடித்த நடவடிக்கையை கண்முன் கண்டார்கள். தூரத்திலிருந்து இக்காட்சியை கண்ட பிறகு இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்? என்று உடனடியாக தமக்குள் ஆலோசனை செய்ய ஆரம்பித்தார்கள். நாம் இங்கிருந்து உடனடியாக ஓடி சென்று விட வேண்டும்; ;மேலும் மதீனா சென்றடைந்து பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கொடுக்க வேண்டும் என்று ஒருவர் கூறினார். ஆனால், மற்றவரோ இந்த ஆலோசனைக்கு ஒப்புக் கொள்ளவில்லை. நம்முடைய அமீர் முன்ஸிர் பின் அம்ர் அவர்கள் எங்கு ஷஹீதானார்களோ அந்த இடத்தை விட்டு நான் ஓடிச் செல்ல மாட்டேன் என்று கூறினார். ஆகவே அவர் முன்னேறிச் சென்று சண்டையிட்டு ஷஹீதாகிப் போனார்.

இது ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலுடைய மேற்கோள் ஆகும்.

ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ (ரலி) அவர்களை தவிர மற்றொரு நபரும் உயிர் தப்பினார். அவர் கால் ஊனமுற்றவராக இருந்தார். அந்த ஸஹாபியின் பெயர் கஅப் பின் ஸைத் ஆக இருந்தது. காஃபிர்கள் அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தினார்கள் என்று சில அறிவிப்புகளில் இருந்து தெரிய வருகின்றது. இவர்கள் ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்களுடன் இருந்தார்கள். அதன் காரணமாக இவர்கள் கடுமையாக காயமுற்றிருந்தார்கள். இவரை இறந்தவர் எனக் கருதி காஃபிர்கள் இவரை விட்டு விட்டார்கள். கடுமையாக காயம் அடைந்திருந்த போதிலும் இவரிடம் உயிர் எஞ்சி இருந்தது. ஷஹீதுகளின் சடலங்களுக்கிடையிலிருந்து இவர் எடுக்கப்பட்டார். அதன் பிறகு அவர் உயிர் வாழ்ந்தார். இறுதியில் அகழ்ப் போரில் இவர்களுக்கு ஷஹீதாகுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது.

ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அம்ர் பின் உமைய்யா கைது செய்யப்பட்டார்கள். எதிரிகள் கேட்டபோது, தாம் பனூ முளிர் கோத்திரத்தைச் சார்ந்தவன் என்று அன்னார் கூறினார்கள். அப்போது ஆமிர் பின் துஃபைல், அம்ர் (ரலி) அவர்களை பிடித்து அவர்களுடைய நெற்றி முடியை வெட்டி விட்டான். பிறகு தன் தாயார் சார்பாக அவர்களை விடுதலை செய்து விட்டான். ஏனெனில், அவனுடைய தாயார் ஓர் அடிமையை விடுதலை செய்வதாக நேர்ந்து இருந்தாள். அரேபியர்கள் யாரையாவது கைதியாக ஆக்கினாலோ அதற்குப் பிறகு அவரை விடுதலை செய்து அவர் மீது கருணை காட்ட எண்ணம் கொள்ளும் போது அவருடைய நெற்றி முடியை வெட்டி விடுவார்கள். அதன் பிறகு அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள். எந்த அளவிற்கு என்றால் ஒரு நிழலான இடத்தை அடைந்து அங்கு அமர்ந்து விட்டார்கள். அப்போது இரு நபர்கள் அங்கு வந்தனர். அவர்கள் அம்ர் அவர்களுக்கு அருகில் வந்து அமர்ந்தார்கள். அம்ர் அவர்கள் அந்த இருவரைக் குறித்து விசாரித்தபோது, நாங்கள் பனூ ஆமிரைச் சார்ந்தவர்கள் என்று அவர்கள் கூறினார்கள்.மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில் அவர்கள் பனூ ஸுலைமை சார்ந்தவர்கள் என்று வருகிறது. அந்த இரு கோத்திரத்துடன் பெருமானார் (ஸல்) அவர்கள். அவர்களுக்கு அடைக்கலம்

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

கொடுத்திருந்தார்கள். ஆனால் அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்களுக்கு இந்த உடன்படிக்கை குறித்து தெரியாது. அவர்கள் இருவரும் தூங்குவதற்காக ஹஸ்ரத் அம்ர் பின் உமைய்யா (ரலி) காத்திருந்தார்கள். அவர்களுக்கு தூக்கம் வந்து தூங்கியபோது அம்ர் (ரலி) அவர்கள் அவ்விருவரையும் கொன்று விட்டார்கள். இவர்கள் இருவர் மூலமாக பனூ ஆமிரிடமிருந்து ஸஹாபிகளுக்கான பழிவாங்கலை செய்து விட்டோம் என்ற எண்ணம் மட்டுமே அப்போது அவர்களது சிந்தனையில் இருந்தது. அதன் பிறகு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் சென்று அன்னாரிடம் இந்த சம்பவங்களைக் கூறினார்கள். அந்த இரு நபர்களை கொலை செய்த தகவலையும் கூறினார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் எப்படிப்பட்ட இரு நபரை கொன்றுள்ளீர்கள் என்றால் இப்பொழுது நாம் அவர்களுடைய உயிருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுடைய இழப்பீட்டை கொடுத்தார்கள். பிறகு அன்னார் (ஸல்) ஸஹாபிகள் கொல்லப்பட்ட சம்பவத்தைக் குறித்து கூறும்போது, இது அபூ பராஃவுடைய நடவடிக்கை ஆகும். நான் அதன் காரணமாகத்தான் ஸஹாபிகளை அவருடன் அனுப்புவதற்கு விருப்பப்படாமல் இருந்தேன். இந்த கோத்திரங்கள் ஸஹாபிகளுக்கு (ஏதேனும்) நஷ்டம் ஏற்படுத்தி விடக் கூடாது என்று நான் அஞ்சிக் கொண்டிருந்தேன் என்று கூறினார்கள்.

தன்னுடைய சகோதரனுடைய மகன் ஆமிர் பின் துஃபைல் தன்னால் வழங்கப்பட்ட அடைக்கலத்தை முறித்து விட்டதாக அபூ பராஃவுக்கு தெரிய வந்த போது அவருக்கு மிகுந்த துக்கம் ஏற்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளுக்கு அதன் காரணமாக ஏற்பட்ட முடிவை எண்ணி அவருக்கு துக்கம் ஏற்பட்டது. ஆகவே அபூ பராவுடைய மகன் ரபீஆ, ஆமிர் பின் துஃபைல் மீது தாக்குதல் தொடுத்தார். அவர் அவருடைய தந்தை வழி சகோதரராக இருந்தார். ரபீஆ, ஆமிர் மீது ஈட்டி எறிந்தார். அது அவனுடைய தொடையில் குத்தியது. அப்போது ஆமிர் உரக்க கத்தியவாறு நான் இறந்தால் எனது இறப்புக்கு ஆபூ பராஃ காரணமாவார். நான் உயிருடன் தப்பிவிட்டால் என் விவகாரத்தை நானே பார்த்துக் கொள்வேன் என்று கூறினான். ஆமிர் பின் துஃபைல் அந்த தாக்குதலுக்குப் பிறகு உயிருடன் இருந்தான். அவனுக்கு பெருமானார் (ஸல்) அவர்களின் சாபம் வந்தடைந்தது. அவனுக்கு பிளேக் நோய் ஏற்பட்டது. அதன் காரணமாக அவன் நிராகரித்த நிலையில் மரணித்து விட்டான். எவ்வாறு இருப்பினும் அபூ பராஃவும் அதில் இணைந்திருந்தார். ஆரம்பித்திலேயே அவர் சென்று அம்மக்களை தடுத்திருக்க வேண்டும். ஆபூபராஃ என்ற ஆமிர் பின் மாலிக்கை பொருத்தவரை அவரைக் குறித்து இரண்டு விதமான கூற்றுகள் காணக் கிடைக்கின்றன. சில ஆலிம்கள் அவரை ஸஹாபிகளுள் இணைக்கின்றார்கள். ஓர் அறிவிப்பில் வருவது போன்று, அபூ பராஃ ஆமர் பின் மாலிக், பனூ பக்ர் மற்றும் பனூ ஜஃபர் கோத்திரத்தைச் சார்ந்த 25 நபர்களுடன் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார். பெருமானார் (ஸல்) அவர்கள் ஆமிர் பின் மாலிக் மற்றும் ஸிஹாக் பின் ஸுஃப்யான் கலாயீ ஆகியோரை பனூ பக்ர் மற்றும் பனூ ஜஃபர் மீது ஆளுநர்களாக நியமித்தார்கள். இவர் பிற்காலத்தில் முஸ்லிம் ஆகிவிட்டார் என்று இந்த அறிவிப்பு சான்று பகர்கின்றது. இன்னொரு கூற்றின் அடிப்படையில் அபூபரா முஸ்லிமாக ஆகவில்லை என்று உள்ளது. எவ்வாறு இருப்பினும் இந்த இருவகையான கூற்றுகள் காணப்படுகின்றன. இதைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் அன்னாருடைய ஸஹாபிகளுக்கும் ரஜீஃ சம்பவம் குறித்தும், பிஃரே மவூனா சம்பவம் குறித்தும் ஏறக்குறைய ஒரே நேரத்தில்தான் தகவல் கிடைத்தது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இதற்கான கடும் வருத்தம் ஏற்பட்டது. எந்த அளவுக்கு என்றால், அறிவிப்புகளில் கூறப்படுகின்றது; இதுபோன்ற துயரம் அதற்கு முன்பும் ஒருபோதும் வரவில்லை ; அதற்கு பிறகும் ஒருபோதும் வரவில்லை. ஏறக்குறைய 80 ஸஹாபிகள் இவ்வாறு ஏமாற்றப்பட்டு திடீரென்று கொல்லப்படுவது அதுவும் அந்த ஸஹாபிகளில் அநேகம் பேர் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களாக இருந்தார்கள். ஏழைகளாகவும், தன்னலமற்ற வர்க்கமாகவும் அவர்கள் இருந்தனர். அரேபியாவின் கொடூரமான சடங்கு சம்பிரதாயங்களை கருத்தில் கொண்டு பார்க்கும் போதும், இது ஒரு சாதாரண சம்பவமாக இருக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி 80 மகன்களுடைய மரணச் செய்திக்கு ஒப்பானதாக இருந்தது. இன்னும் கூறுவது என்றால், அதை விட அதிகமாக துன்பம் தரக் கூடியதாக இருந்தது. ஏனெனில், ஓர் ஆன்மிகவாதிக்கு ஆன்மிக உறவு என்பது நிச்சயமாக ஓர் உலகவாதிக்கு உலக உறவில் இருக்கும் நேசத்தை விட அதிக நேசத்திற்குரியதாக இருக்கிறது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த நிகழ்வுகளினால் கடுமையான வருத்தம் இருந்தது. ஆனால் இஸ்லாத்தில் எந்நிலையிலும் பொறுமைக்கான கட்டளையே உள்ளது. எனவே அன்னார் (ஸல்) அந்த செய்தியை கேட்டு விட்டு இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் என்று கூறினார்கள். இது அபூ பராவுடைய செயலின் விளைவாகும். இல்லை என்றால் நான் அந்த மக்களை அனுப்புவதற்கு விருப்பம் இல்லாமல்தான் இருந்தேன். நஜது வாசிகள் சார்பாக எனக்கு அச்சம் இருந்தது என்று மட்டும் கூறிவிட்டு மௌனமாகி விட்டார்கள்.

பிஃரே மவூனா சம்பவம் மற்றும் ரஜீஃ சம்பவம் ஆகியவற்றின் மூலமாக இஸ்லாத்திற்கு எதிராகவும், இஸ்லாத்தை பின்பற்றக் கூடியவர்களுக்கு எதிராகவும் அரேபிய கோத்திரங்கள் தம் உள்ளத்தில் வைத்திருந்த உச்சபட்ச கோபத்தைப் பற்றியும் விரோதத்தைப் பற்றியும் தெரிய முடிகிறது.எந்த அளவுக்கு என்றால் அவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக மிக இழிவான பொய்களையும், மோசடிகளையும். ஏமாற்றுதல்களையும் செய்வதை விட்டும் விலகி இருக்கவில்லை. முஸ்லிம்கள் எந்த அளவு சுதாரிப்பாக இருந்த போதிலும், விழிப்பாக இருந்த போதிலும் சில சமயங்களில் நம்பிக்கையாளர்கள் என்ற வகையில் அவர்கள் வைத்திருக்கும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்த இரையில் சிக்கிக் கொண்டு விடுகின்றார்கள். திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள், தொழுகையாளிகள், தஹஜ்ஜுத் தொழக்கூடியவர்கள் பள்ளிவாசலில் ஓர் ஓரத்தில் அமர்ந்து அல்லாஹ்வின் பெயரை உச்சரிக்கக் கூடியவர்கள், ஏழைகள், வறியவர்கள், பசியோடு இருக்கக் கூடியர்களாக அம்மக்கள் இருந்தனர். அவர்களை இந்த அநீதியாளர்கள் மார்க்கத்தை கற்றுக் கொள்ள வேண்டும் என்ற சாக்குபோக்கைக் கூறி தம் ஊருக்கு அழைப்பார்கள். அவர்கள் விருந்தினர் என்ற முறையில் அவர்களுடைய ஊர்களுக்கு செல்லும்போது மிகவும் இரக்கமற்ற முறையில் அவர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவங்கள் மூலமாக எந்த அளவு துக்கம் ஏற்பட்டாலும் அது குறைவாகத்தான் இருந்தது. அச்சமயத்தில் அன்னார் (ஸல்) ரஜீஃ மற்றும் பிஃரே மவூனா கொலையாளிகளுக்கு எதிராக எவ்வித போர் நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ரஜீஃ சம்பவம் மற்றும் பிஃரே மவூனா சம்பவத்திற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு மாத காலம் வரை அன்னார் (ஸல்) தொழுகையில் குனூத் துஆ ஓதி வந்தார்கள். ரஜீஃ மற்றும் பிஃரே மவூனா சம்பவங்களைக் குறித்து ஒரே இரவில் அன்னாருக்கு தகவல் கிடைத்தது என்று ஓர் அறிவிப்பில் வந்துள்ளது. அந்த இரு சம்பவங்களிலும் ஸஹாபா பெருமக்களை ஏமாற்றி மோசடி செய்து கொன்றிருப்பார்கள். ரஜீஃ சம்பவத்தில் 10 ஸஹாபிகள் மட்டுமே இருந்தனர். ஆனால், பிஃரே மவூனா சம்பவத்தில் 70 ஸஹாபிகள் இருந்தனர். அதில் ஒருவர் மட்டுமே உயிர் தப்பினார். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பிஃரே மவூனா சம்பவத்தின் காரணமாக எந்த அளவு அதிக துக்கமும், வருத்தமும் ஏற்பட்டது என்றால், அதை ஓர் அறிவிப்பின் மூலமாக அனுமானிக்க முடிகின்றது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பிஃரே மவூனா உடைய ஷஹீதுகள் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு வருத்தம் ஏற்பட்டது என்றால் எந்தவொரு விஷயத்திற்காகவும் அன்னார் (ஸல்) இவ்வாறு வருத்தப்பட்டதாக நான் கண்டதில்லை என்று அன்னார் (ரலி) அறிவிக்கின்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு மாதம் முழுவதும் ஃபஜ்ர் தொழுகையில் குனூத் துஆ ஓதினார்கள். அதில் ரிஃல். ஸக்வான் மற்றும் பனனூ லிஹ்யான் ஆகிய கோத்திரங்களின் மீது சாபமிட்டு வந்தார்கள். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது: பெருமானார் (ஸல்) அவர்கள் ரிஃல், ஸக்வான் ஆகிய கோத்திரங்கள் மீது ஒரு மாதம் வரை சாபமிட்டு வ்நதார்கள். ஸஹீஹ் முஸ்லிமில் அந்த துஆவுடைய சொற்கள் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்து: அல்லாஹ்வே! பனூ லிஹ்யான், ரிஃல். ஸக்வான் மற்றும் உஸைய்யா ஆகியவற்றின் மீது சாபத்தை அனுப்புவாயாக! அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருக்கு கட்டுப்படாமல் இருந்துள்ளார்கள்; கஃப்பார் கோத்திரத்தை அல்லாஹ் மன்னித்தருள்வானாக! அஸ்லம்

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

கோத்திரத்தை அல்லாஹ் நலமுடன் வைத்திருப்பானாக! என்று துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ரஜீஃ மற்றும் பிஃரே மவூனா ஆகியவற்றின் துயர நிகழ்வுகளின் செய்திகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கிடைக்கப் பெற்றது குறித்து எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: அச்செய்தி கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து தொடர்ச்சியாக 30 நாட்கள் வரை பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நாளும் தொழுகையில் நிற்கும் போது மிகவும் உருக்கத்துடன் ரிஃல் மற்றும் ஸக்வான், உஸைய்யா மற்றும் பனூ லிஹ்யான் கோத்திரங்களின் பெயரை எடுத்துரைத்து அல்லாஹ்விடத்தில், என்னுடைய எஜமானனே! நீ! எங்களின் நிலைகளின் மீது கருணை காட்டுவாயாக! இஸ்லாத்தின் எதிரியுடைய கையை தடுப்பாயாக! அவர்கள் உன் மார்க்கத்தை அழிப்பதற்காக இரக்கமற்ற முறையிலும், கடுமையான முறையிலும் அப்பாவி முஸ்லிம்களின் இரத்தத்தை சிந்தச் செய்தார்கள் என்று துஆ செய்தார்கள்.

இது பிஃரே மவூனா உடைய போர் சம்பவம் ஆகும்.

நான் எப்பொழுதும் வலியுறுத்துவது போன்று அநீதிக்குள்ளாக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்காக துஆக்களை செய்து வாருங்கள். அல்லாஹ் விரைவில் அநீதியாளர்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக! எவ்வாறு ஸஹாபிகள் ஏமாற்றப்பட்டு கொல்லப்பட்டார்களோ அவ்வாறு அப்பாவிகள் கொல்லப்படுகிறார்கள். சில சமயம் ஓர் இடத்திற்கு அனுப்பப்படுகின்றார்கள்; சிலசமயம் வேறு இடத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். பிறகு அங்கே குண்டுகள் வீசப்படுகின்றன. அல்லாஹ் கருணை காட்டுவானாக!

உலகின் பொதுவான நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் மிக வேகமாக அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது; போருக்கான அறிகுறிகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அல்லாஹ் அஹ்மதிகளை போரின் தீய தாக்கத்திலிருந்தும், அதனுடைய தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக!

பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆ செய்து வாருங்கள். தற்போது மீண்டும் அவர்களுக்கு கஷ்டங்கள் அதிகரித்து வருகின்றன. அல்லாஹ் கருணை காட்டுவானாக. அநீதியாளர்களிடமிருந்து அவர்களுக்கும் இரட்சிப்பை வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மத்

* * * * * *


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com


12- ம் பக்கத் தொடர்ச்சி (குத்பா பேருரை 21-6-24) ........ ....

செல்வங்களையும், சொத்துக்களையும், குழந்தைகளையும் அழுது புலம்பியவாறு விட்டு செல்வீர்கள். நீங்கள் என்னுடைய விஷயத்தை ஒப்புக் கொண்டால் உங்களுடைய பெருமையும், கண்ணியமும் எஞ்சி இருக்கும். என்னுடைய இரு விஷயங்களை ஒப்புக் கொள்ளுங்கள்; இல்லையென்றால் மூன்றாவது விஷயத்தில் நன்மை இருக்காது.

அந்த இரு விஷயங்கள் எவை? என்று அவர்கள் கேட்டார்கள். அவர் கூறினார்: முதல் விஷயம் என்னவென்றால் நீங்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்களாக ஆகிவிடுங்கள்; அப்போது உங்களுடைய செல்வங்களும் உங்களுடைய சந்ததிகளும் பாதுகாப்பாக இருப்பார்கள். நீங்கள் அன்னாருடைய உயரிய தோழர்களாக ஆகி விடுவீர்கள்; உங்களுடைய வீடுகளை விட்டு வெளியேற்றப்பட மாட்டீர்கள்.

யூதர்கள் கினானா பின் சூரியா உடைய விஷயத்திற்கு இவ்வாறு பதிலளிக்கும்போது, நாங்கள் தவ்ராத்தையும் மூஸாவின் கூற்றையும் விட்டு விட மாட்டோம் என்றார்கள்.

கினானா கூறினார்: இரண்டாவது விஷயம் என்னவென்றால் நீங்கள் என்னுடைய நகரத்தை விட்டு வெளியேறி விடுங்கள் என்று அவர் உங்களுக்கு வெகு விரைவில் கட்டளையிடுவார். நீங்கள் அதற்கு காத்திருங்கள். அதற்கு நீங்கள் ஆம் என்று கூறிவிடுங்கள். பிறகு அவர் உங்களுடைய இரத்தம் மற்றும் உங்களுடைய செல்வம் ஆகியவற்றை தனக்கு ஆகுமானதாக அவர் ஆக்கிக் கொள்ள மாட்டார். உங்களுடைய செல்வங்களையும், சொத்துக்களையும் உங்களுக்காக விட்டுவிடுவார். நீங்கள் விரும்பினால் அதை விற்று விடலாம்; விரும்பினால் தம்மிடத்தில் வைத்துக் கொள்ளலாம்.

அதற்கு அவர்கள். ஆம்! நிச்சயமாக நாங்கள் இதற்கு ஆயத்தமாக இருக்கிறோம் என்று கூறினார்கள். ஸலாம் பின் மிஷ்கம் கூறினார்: நீங்கள் கூறிய விஷயங்களுக்கு நான் கட்டாயத்திற்குள்ளாகி உங்களுடன் இணைந்திருந்தேன்; நீங்கள் இந்தப் பகுதியை விட்டு வெளியேறி விடுங்கள் என்று அவர்( அதாவது முஹம்மது (ஸல்) அவர்கள்) இப்போது நமக்கு செய்தி அனுப்பி இருக்கிறார்; ஹுயையே! அவர் கூறும் விஷயத்தில் தயக்கம் காட்ட வேண்டாம்.

அதாவது அந்த தலைவரைப் பார்த்து கூறினார். நாடு கடத்தப்படுவதை மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு அவருடைய நகரத்தை விட்டு வெளியேறி விட வேண்டும் என்று கூறினார். நான் அவ்வாறே செய்வேன். இந்த இடத்தை விட்டு சென்று விடுவேன் என்று ஹுயய் கூறினார்.

மதீனா சென்றடைந்த பிறகு அந்த சதித் திட்டங்களை குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் என்ன நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்பதைப் பற்றி கூறப்படும்போது, பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களை நாடு கடத்த கட்டளையிட்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் செல்வதற்கு மறுத்து விட்டார்கள். ஆரம்பத்தில் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்; ஆனால் பிறகு அவர்களுடைய எண்ணம் மாறிவிட்டது என்று எழுதப்பட்டுள்ளது. இதனுடைய விவரம் என்னவென்றால்,

பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா சென்றடைந்த பிறகு ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை அழைத்து வர கூறினார்கள். அவர்கள் வந்த போது, பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு கட்டளையிட்டவாறு, நீங்கள் பனூ நளீர் யூதர்களிடம் செல்லுங்கள்; அவர்களிடம் சென்று, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நகரத்தை விட்டு நீங்கள் வெளியேறி விடுங்கள் என்ற இந்த செய்தியுடன் உங்களிடத்தில் என்னை அன்னார் (ஸல்) அனுப்பி வைத்துள்ளார்கள் என்று கூறுங்கள் என்றார்கள்.முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் பனூ நளீர் சென்றடைந்த பிறகு அவர்களிடம் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களுக்காக ஒரு செய்தியை அனுப்பியுள்ளார்கள். ஆனால் நான் அதை கூறுவதற்கு முன்பு உங்களுக்கு ஒரு விஷயத்தை நினைவுப்படுத்த விரும்புகின்றேன். அதைப் பற்றி உங்கள் அனைவருக்கும் தெரியும் என்றார்கள். அந்த விஷயம் என்ன? என்று அவர்கள் கேட்டனர். முஹம்மத் பின் முஸ்லிமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: மூஸா (அலை) அவர்கள் மீது அல்லாஹ் இறக்கிய தவ்ராத்தை முன்னிறுத்தி நான் உங்களிடம் கேட்கிறேன். இஸ்லாத்திற்கு முன்பு நான் ஒருநாள் தவ்ராத்தை உங்களிடம் கொண்டு வந்தேன்; அதை உங்களுக்கு முன்னால் எடுத்து வைத்தேன்; அது உங்களுக்கு நினைவு இருக்கும்; உணவு உண்ண விரும்புகிறீர்கள் என்றால் உணவு கொடுக்கின்றோம். யூதனாக ஆக விரும்புகிறீர்கள் என்றால் உங்களை யூதராக ஆக்குகின்றோம் என்று நீங்கள் கூறினீர்கள். அதற்கு நான் உணவு கொடுத்தீர்கள் என்றால், உண்ணுகிறேன். யூதராக ஆகச் சொல்கின்றீர்கள் என்றால் அது சாத்தியமில்லை என்றேன். பிறகு நீங்கள் ஒரு தட்டில் எனக்கு உணவு கொடுத்தீர்கள். நீங்கள் யூத மார்க்கத்தை ஏன் ஒப்புக் கொள்ள விரும்பவில்லை?; நீங்கள் இப்ராஹீமிய மார்க்கத்தை தேடிக் கொண்டிருக்கிறீர்களா? அபூ ஆமிர் துறுவி இப்ராஹீமிய மார்க்கத்தை பின்பற்றக் கூடியவர் இல்லையா? எந்த நபியைப் பற்றி அடையாளங்கள் கூறப்பட்டுள்ளனவோ அந்த மார்க்கத்து நபி எங்களிடத்தில் வர இருக்கிறார். அவர் தொடர்பாக, அவர் இன்முகத்துடன் காணப்படுவார்; அவருடைய கண்கள் சிவப்பு நிறச்சாயலைக் கொண்டிருக்கும்; அவர் ஏமன் திசையில் இருந்து வருவார். ஒட்டகத்தில் பயணிப்பார்; தலையில் தலைப்பாகை அணிந்திருப்பார்; காய்ந்த ரொட்டித் துண்டுகளை (உண்பதை) போதுமானதாகக் கருதுவார்; அவருடைய கழுத்தில் வாள் தொங்கிக் கொண்டிருக்கும்; அவர் நுட்பமான, அறிவான விஷயங்களை பேசுவார் என்று அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன என்றார்கள். நீங்கள் அனைத்து அடையாளங்களையும் சரியாக கூறினீர்கள் ; நாங்கள் இவ்விஷயங்களை உம்முடன் பேசினோம். ஆனால், இந்த அடையாளங்கள் அவரிடம் அதாவது முஹம்மது (ஸல்) அவர்களிடத்தில் காணப்படவில்லை என்று யூதர்கள் கூறினார்கள்.

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்....)

தமிழாக்கம்:
மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மத்

* * * * * *

# ஜுமுஆ பேருரை

**பனூ நளீர் கோத்திரத்தின் தரப்பிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு தீட்டிய தீட்டப்பட்ட சதித் திட்டம் மற்றும் பனூ நளீர் போருக்கான காரணிகளைப் பற்றிய விளக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு யூதர்களின் இந்த தீய எண்ணத்தைக் குறித்து வஹீயின் மூலமாக தகவல் கொடுத்து விட்டான். மேலும் அன்னார் (ஸல்) விரைவாக அங்கிருந்து எழுந்து சென்று விட்டார்கள்.**

நீங்கள் பனூ நளீர் யூதர்களிடம் செல்லுங்கள்; அவர்களிடம் சென்று, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நகரத்தை விட்டு நீங்கள் வெளியேறி விடுங்கள் என்ற இந்த செய்தியுடன் உங்களிடத்தில் என்னை அன்னார் (ஸல்) அனுப்பி வைத்துள்ளார்கள் என்று கூறும்படி பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்.

ஸல்லாம் மிஷ்கம் என்பவர் ஹுய்யீ பின் அக்தபிடம் இவ்வாறு கூறினார்: இறைவன் மீது ஆணையாக! நீரும் அறிவீர்; அவர் அல்லாஹ்வின் தூதர் ஆவார் என்பதை உம்முடன் சேர்ந்து நாங்களும் அறிவோம். அவருடைய பண்புகள் நம்மிடம் இருக்கின்றன. அவரை நாம் பின்பற்றவில்லையென்றால் பின்னர் நாம் அவரிடம் பொறாமை கொள்கின்றோம் என்பதே காரணம் ஆகும். ஏனெனில் நபித்துவம் ஹாரூனுக்குப் பிறகு வெளியேறிவிட்டது. வாருங்கள் நாம் அவரால் கொடுக்கப்பட்ட பாதுகாப்பை ஏற்றுக் கொள்வோம்

மேலும் ஸல்லாம் மிஷ்கம் என்பவர் ஹுய்யீ பின் அக்தபிடம் இவ்வாறு கூறினார்: அப்துல்லாஹ் பின் உபையிற்கு எந்த அந்தஸ்தும் கிடையாது. அவன் உம்மை அழிவின் கிடங்கில் வீசிவிடுவான். எந்த அளவிற்கு என்றால் நீர் முஹம்மது (ஸல்) அவர்களுடன் போர் செய்ய நேரிடும். அவனோ தனது வீட்டில் அமர்ந்து கொண்டிருப்பான்; உம்மை தனியாக விட்டு விடுவான்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 ஜுன் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **21ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக பனூ நளீர் என்ற யூத கோத்திரம் ஒன்று சதித் திட்டம் தீட்டியது. அதைப் பற்றி கூறப்பட்டு வந்தது. பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக அவர்கள் தீட்டிய திட்டத்தை எவ்வாறு அல்லாஹ் தோல்வியுறச் செய்தான்? என்பதைப் பற்றிய விளக்கத்தை எடுத்துக் கூறுவேன் என்று கடந்த குத்பாவில் நான் கூறியிருந்தேன். அதைக் குறித்து எழுதப்பட்டுள்ளதாவது:

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வஹீ மூலமாக சதித் திட்டம் பற்றி தெரிய வந்தது. அம்ர் பின் ஜஹஷ் என்பவன் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது பாறையை எறிவதற்காக வீட்டின் மேலே ஏறிவிட்டான். அப்போது யூதர்களின் சதித் திட்டம் பற்றி வஹீ மூலமாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு செய்தி கிடைத்தது. அன்னார் (ஸல்) உடனடியாக தம் இடத்தை விட்டு விட்டு வேறு ஒரு வேலை இருப்பது போல் அன்னார் (ஸல்) புறப்பட்டு விட்டார்கள். அன்னார் (ஸல்) விரைவாக மதீனாவை நோக்கி திரும்பி சென்று விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டாய தேவைக்காக சென்றிருப்பார்கள் என்று அன்னாருடைய தோழர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், சிறிது நேரம் கழிந்த பிறகு ஸஹாபிகளுக்கு அன்னாரைக் குறித்த கவலை ஏற்பட்டது. அவர்கள் அன்னாரைத் தேடி புறப்பட்டார்கள். அப்போது வழியில், மதீனாவில் இருந்து வந்து கொண்டிருந்த ஒரு நபரை சந்தித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களைக் குறித்து அவரிடம் ஸஹாபிகள் கேட்டனர். அன்னார் (ஸல்) மதீனாவில் நுழைவதை தாம் கண்டதாக அவர் கூறினார். உடனடியாக ஸஹாபிகள் மதீனாவில் அன்னாரிடம் சென்றடைந்தனர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் பனூ நளீருடைய சதித் திட்டம் பற்றி கூறினார்கள்.

இன்னொரு பக்கமோ யூதர்கள் தமக்குள் ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது மதீனாவில் இருந்து ஓர் யூதன் வந்தான். பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி தனது தோழர்கள் பரஸ்பர ஆலோசனை செய்து கொண்டிருப்பதை அவன் கேட்டபோது, நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்? என்று கேட்டான். முஹம்மது (ஸல்) அவர்களை கொலை செய்து விட வேண்டும்; அவர்களுடைய தோழர்களை கைது செய்து விட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் என்று அவர்கள் கூறினார்கள். முஹம்மது ((ஸல்) எங்கு உள்ளார்? என்று அவன் கேட்டான். முஹம்மது (ஸல்) அருகில் இன்னோர் இடத்தில் அமர்ந்திருக்கிறார் என்று அவர்கள் கூறினர். அப்போது அவன் தமது தோழர்களிடம், முஹம்மது (ஸல்) மதீனாவிற்குள் நுழைந்து கொண்டிருப்பதை நான் கண்டேன் என்று கூறினான். அதைக் கேட்டு அவர்கள் திகைத்து விட்டனர்.

இன்னொரு வாழ்க்கை வரலாற்றாசிரியர் இதைக் குறித்து எழுதும்போது கூறுகிறார்: பெருமானார் (ஸல்) அவர்கள் திரும்புவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆனபோது ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள், நாம் இங்கு நின்று கொண்டிருப்பதில் எவ்வித பயனும் கிடையாது; நிச்சயமாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து ஏதேனும் கட்டளை வந்துள்ளது என்று கூறினார்கள். அப்போது அவர்கள் அனைவரும் அங்கிருந்து புறப்பட்டபோது, யூதர்களின் தலைவராகிய ஹுயய் பின் அக்தபிடம், அபூ காஸிம் அவசரப்பட்டு விட்டார் ; நாங்களோ உணவுக்கான ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றோம்; இழப்பீடு பற்றி ஆலோசனை செய்து கொண்டிருந்தோம். அவர்களுக்கு உணவு கொடுத்த பிறகு உங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய நினைத்திருந்தோம் என்று கூறினார். பிறகு ஸஹாபா பெருமக்கள் மதீனாவை நோக்கி திரும்பி வந்து கொண்டிருக்கும்போது அவர்கள் ஒரு நபரை சந்தித்தார்கள். நீர்! பெருமானார் (ஸல்) அவர்களை கண்டீரா? என்று அவரிடம் கேட்டார்கள். இப்போதுதான் அன்னாரை சந்தித்தேன்; அன்னார் (ஸல்) மதீனாவிற்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள் என்று அவர் கூறினார். ஸஹாபா பெருமக்கள் அங்கு சென்றடைந்த போது பெருமானார் (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 18 - 25 July 2024 Issue No.29 & 30

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் அங்கிருந்து புறப்பட்டு வந்து விட்டீர்கள் ; எங்களுக்கு தெரியவே இல்லையே! என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அன்னார் (ஸல்)

هَمَّتِ الْيَهُودُ بِالْغَدْرِبِيْ

என்று கூறினார்கள். அதாவது யூதர்கள் என்னை ஏமாற்றலாம் என்று எண்ணம் கொண்டிருந்தார்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இறை வஹீயின் அடிப்படையில் உடனடியாக புறப்பட்டு வந்து விட்டார்கள். ஸஹபா பெருமக்களுக்கு ஏன் ஒன்றும் புரியவில்லை? என்றால், அவர்கள் ஆபத்தின் பிடியில் இருக்கவில்லை. யூதர்களின் அசல் குறி பெருமானார் (ஸல்) அவர்கள்தான். ஆகவே என்னுடைய ஸஹாபிகள் பாதுகாப்புடனும், நலமுடனும் இருப்பது மட்டுமின்றி அவர்கள் என்னை தேடி விரைவாக புறப்பட்டு வந்து விடுவார்கள் என்று அன்னார் (ஸல்) நிம்மதியுடன் இருந்தார்கள்.

அப்போது,

يَآيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اذْكُرُوْا نِعْمَتَ اللهِ عَلَيْكُمْ
اِذْ هَمَّ قَوْمٌ اَنْ يَّبْسُطُوْٓا اِلَيْكُمْ
اَيْدِيَهُمْ فَكَفَّ اَيْدِيَهُمْ عَنْكُمْ ۚ وَاتَّقُوا اللهَ ؕ
وَعَلَى اللهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُوْنَ

என்ற இந்த வசனமும் இறங்கியதாகக் கூறுகிறார்கள்.

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு செய்த பேரருளை நினைத்துப் பாருங்கள். அதாவது ஒரு சமுதாயத்தினர் தங்களுடைய விஷம கைகளை உங்களுக்கு எதிராக நீட்ட நாடியபோது, அவன் அவர்களுடைய கைகளை உங்களை விட்டு தடுத்தான். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நம்பிக்கை கொண்டோர் அல்லாஹ்விடத்திலேயே நம்பிக்கை வைக்க வேண்டும்.( அல்மாயிதா: வசனம் 12)

(ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத், தொகுதி 4, பக்கம் 319, தாருல் குதுபில்இல்மியா பெய்ரூத் லெபனான், 1993-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இதைக் குறித்து எழுதுகிறார்கள்:


பெருமானார் (ஸல்) அவர்கள் வருகை தந்ததை கண்டு அவர்கள் அதாவது யூதர்கள் வெளிப்படையான முறையில் மகிழ்ச்சியுற்றார்கள். தாங்கள் அமருங்கள்; நாங்கள் இப்பொழுது எங்களுடைய பங்குத் தொகையை கொடுக்கின்றோம் என்று அவர்கள் கூறினார்கள். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் தம் சில தோழர்களுடன் ஒரு (வீட்டுச்) சுவருடைய நிழலில் அமர்ந்து விட்டார்கள். பனூ நளீர் பரஸ்பர ஆலோசனைக்காக ஒரு பக்கமாக சென்று விட்டார்கள். பணத்துக்கான ஏற்பாட்டை செய்வதாக அவர்கள் காட்டிக் கொண்டார்கள். ஆனால், பணத்துக்கான ஏற்பாட்டை செய்யாமல் அவர்கள் செய்த ஆலோசனை என்னவென்றால், இது மிகவும் நல்ல சந்தர்ப்பமாகும். முஹம்மது (ஸல்) அவர்கள் வீட்டின் நிழலில் சுவர் ஓரத்தில் அமர்ந்திருக்கின்றார்கள். யாரேனும் ஒரு நபர் இன்னொரு பக்கமாக வீட்டின் மேலே ஏறிச் சென்று ஒரு பெரும் பாறையை அவர்கள் மீது போட்டு அவர்களின் கதையை முடித்து விட வேண்டும் (நவூதுபில்லாஹ்) என்று பேசிக் கொண்டார்கள். யூதர்களில் இருந்து ஸலாம் பின் மிஷ்கம் என்ற ஒருவர் இந்த ஆலோசனையை எதிர்த்தார். இது ஒரு மோசடி செயலாகும்; நாம் முஹம்மது (ஸல்) அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு எதிரானதாகும் என்று அவர் கூறினார். ஆனால், அம்மக்களோ இதை ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் அம்ர் பின் ஜஹஷ் என்ற ஓர் யூதன் ஒரு பெரிய பாறையை எடுத்துக் கொண்டு வீட்டின் மேலே ஏறி விட்டான். அந்தப் பாறையை மேலிருந்து அவன் கீழே எறிய இருந்தான். ஆனால் அறிவிப்பில் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு யூதர்களின் இந்த தீய நோக்கத்தை குறித்து அல்லாஹ் வஹீயின் மூலமாக தகவல் கொடுத்து விட்டான். ஆகவே அன்னார் (ஸல்) விரைவாக எழுந்து சென்றார்கள் என்றால், ஒருவேளை அன்னார் ஏதேனும் அவசரத் தேவைக்காக எழுந்து சென்றுள்ளார்களோ! என்று அன்னாருடைய ஸஹாபிகளும், யூதர்களும் நினைத்துக் கொண்டனர். ஆகவே அவர்கள் நிம்மதியுடன் அமர்ந்து கொண்டு அன்னாருடைய வருகைக்காக காத்திருந்தார்கள். ஆனால், அன்னாரோ அங்கிருந்து நேராக மதீனாவை சென்றடைந்து விட்டார்கள். ஸஹாபிகள் கொஞ்ச நேரம் அன்னாருக்காக காத்திருந்தார்கள். ஆனால், அன்னார் (ஸல்) திரும்ப வருகை தராததைக் கண்டபோது அவர்கள் பயந்து போய் தம் இடத்தை விட்டு எழுந்து, இங்குமங்கும் அன்னாரை தேடியவாறு இறுதியில் அவர்களும் மதீனாவை வந்தடைந்து விட்டார்கள். அதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களுடைய இந்த அபாயகரமான சூழ்ச்சியை பற்றி ஸஹாபிகளுக்கு தகவல் கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் எழுந்து சென்ற பிறகு கூறப்பட்டுள்ள விபரத்தில், யூதர்கள் நடந்து கொண்ட விதத்தைப் பற்றி எழுதும்போது, யூதர்கள் தாம் செய்ததை எண்ணி மிகவும் வெட்கப்பட்டனர் என்று எழுதப்பட்டுள்ளது. கினானா பின் சூரியா என்ற ஓர் யூதர், முஹம்மது (ஸல்) அவர்கள் இங்கிருந்து ஏன் எழுந்து சென்றார் என்று நீங்கள் அறிவீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! எங்களுக்கு தெரியாது. உமக்கு ஏதேனும் தெரியும் என்றால் கூறு! என்றார்கள். அந்த நபர் கூறினார்: தவ்ராத்தின் மீது ஆணையாக! நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களுடன் மோசடி செய்ய நாட்டம் கொண்டதை குறித்து அவர்களுக்கு தகவல் கூறப்பட்டு விட்டது. இதை நான் அறிவேன்; இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகவே மேற்கொண்டு நீங்கள் உங்களை ஏமாற்றத்தில் வைக்காதீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக. சந்தேகத்திற்கிடமின்றி அவர் அல்லாஹ்வின் தூதர் ஆவார்; அவர் எழுந்து சென்றது கூட, நீங்கள் ஏமாற்ற இருப்பதை குறித்து அவருக்கு வஹீயின் மூலமாக கூறப்பட்டிருக்கும்; நிச்சயமாக அவர் இறுதி நபியாவார்; இறுதித் தூதர் ஹாரூனுடைய சந்ததியிலிருந்து தோன்ற வேண்டும் என்று நீங்கள் விரும்பிக் கொண்டிருந்தீர்கள்.ஆனால் அல்லாஹ் அவர்களை எங்கிருந்து தோற்றுவிக்க விரும்பினானோ அங்கிருந்து எழுப்பினான். நிச்சயமாக நம்முடைய வேதங்களாகிய தவ்ராத்தில் நாம் படிக்கின்றோம். அவை மாற்றமடைந்து விடவில்லை. அந்த நபியுடைய பிறப்பு மக்காவில் நிகழும்; அவர் யஸ்ரபுக்கு அதாவது மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வார் என்று அதில் எழுதப்பட்டுள்ளது. அவருடைய பண்புகளைப் பற்றி நம்முடைய தவ்ராத்தில் கூறப்பட்டுள்ளவை அவர் மீது மட்டுமே பொருந்திப் போகின்றன. உங்களுக்கு வன்முறையைத் தவிர ஒன்றும் கிடைக்கப் போவதில்லை என்பதை நான் அறிகிறேன். நீங்கள் உங்களுடைய

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்....

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad